DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிர்க்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1505 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 7, 2025

# கனடாவின் அரச கூட்டுத்தாபனமான 'கனடா போஸ்ட்' ஐம்பதுக்கும் மேற்பட்ட முகாமையாளர்கள் தர உத்தியோகத்தர்களை பணிநீக்கம் செய்துள்ளது

கனடாவில் தேசிய அளவில் தபால் சேவையை பொறுப்பேற்று நடத்து அரச கூட்டுத்தாபனமான கனடா போஸ்ட் நிறுவனம் ஐம்பதுக்கும் மேற்பட்ட முகாமையாளர்கள் தரத்தில் நீண்ட காலம் பணியாற்றிய உத்தியோகத்தர்களை பணிநீக்கம் செய்துள்ளது என்ற அதிர்ச்சி தரும் செய்தி சில மணி நேரங்களுக்கு முன்னர் வெளியாகியுள்ளது.

இந்த பணி நீக்க அறிவித்தலுக்கு முக்கிய காரணமாக நீண்ட காலமாக கனடா போஸ்ட் நிறுவனம் எதிர் கொண்ட ”மோசமான நிதி நிலைமை” தான் என்பதை இந்த தேசிய தபால் சேவை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது..

”கனடா போஸ்ட் நிறுவனமானது, அது எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க நிதி மற்றும் செயற்பாட்டு சவால்களுக்கு தொடர்ந்து பதிலளித்து வருவதால், கார்ப்பரேட் அளவிலான மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக இந்த வார தொடக்கத்தில் முகாமையாளர்கள் தரத்தில் நீண்ட காலம் பணியாற்றிய உத்தியோகத்தர்களை பணிநீக்கம் செய்தது என்று கனடா போஸ்ட் கூட்டுத்தாபனம் 6ம் திகதி வியாழக்கிழமை ஊடகங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளது

இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களில் அரைவாசிப் பேர் ஒட்டாவாவில் பணியில் இருப்பதாகவும், மீதமுள்ளவர்கள் ரொறன்ரோ மற்றும் கனடாவின் பிற பகுதிகளிலும் பணியாற்றியதாகவும் கனடா போஸ்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

”இந்த முடிவுகள் ஒருபோதும் எளிதானது அல்ல, ஆனால் அவை தற்போது எதிர்கொள்ளும் முக்கியமான நிதி நிலைமையை பிரதிபலிக்கின்றன” என்று கனடா போஸ்ட் நிர்வாக அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். மேலும், சில வாரங்களுக்கு முன்னர் கனடா போஸ்ட் நிறுவனத்தில் உயர் பதவிகளில் இருந்த சிலரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியும் தற்போது கசிந்துள்ளது.

# கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள அமரர் மாவை சேனாதிராஜா நினைவஞ்சலிக் கூட்டம்



அண்மையில் தாயகத்தில் இறப்பைத் தழுவிய அமரர் மாவை சேனாதிராஜா அவர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 9ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு 2648 **Eglinton Avenue East** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **East Town Banquet Hall** மண்டபத்தில் அமரருக்கான அஞ்சலிக் கூட்டத்தை கனடா வாழ் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் பலர் இணைந்து நடத்துகின்றார்கள்.

50 ஆண்டு கால அரசியல் பாதையை சவால்களுடன் கடந்த கடந்து வந்த ஒரு அரசியல் போராளியை நினைவுகூரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும்படி அனைவரும் அழைக்கப்பெறுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு:

சோம சச்சிதானந்தன் அவர்களை 647 202 3234 , வீரசுப்பிரமணியம் அவர்களை 416 282 0947

வி. துரைராஜா அவர்களை 647 829 4044 ஆகிய இலக்கங்களில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம்.
January 21 தொடக்கம் ஒரு வார காலம் நீங்கள் கியுபாவில் தங்கியிருக்கலாம். கட்டணம் $1,300 மட்டுமே!
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊறாடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
PRIME LEGAL SERVICES
905-334-6851

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






## காப்புறுதி மற்றும் நிதி சம்பந்தமான சேவைகளுக்கு இலவசமாக ஆலோசனை வழங்கப்படும்

**416.892.3249**

"JOIN OUR TEAM HIRING NEW ADVISORS! TRAINING PROVIDED!"

**GTS Life Insurance & Investments Inc.**

- Life Insurance
- Mortgage Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Health Insurance
- Travel Insurance
- Retirement & Estate Planning
- Tax Sheltered Savings & Investments
- RRSP, RESP, RIF and LIF
- Segregated Funds
- Business Protection
- Long Term Care



**குரு தேவராஜன்**
B.Sc.(B.E), M.Sc (Arch)

**GURU Thevarajan**
Insurance Advisor B.Sc.(B.E), M.Sc (Arch)

**416.892.3249**

Email: **tnkuru@hotmail.com**

313 - 2100 Ellesmere Road, Scarborough, ON M1H 3B7
Tel: 416.754.9492 & 416.754.7251 Email: gtslife123@gmail.com
www.gtslifeinsurance.ca



## VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

2025 **KICKS PLAY S**

LEASE FROM $298 MONTHLY WITH $1,299 DOWN.

THAT'S LIKE PAYING

**$69** WEEKLY | AT | **4.99%** APR FOR 39 MONTHS O.A.C.

PLUS, QUALIFYING NISSAN OWNERS MAY RECEIVE UP TO

**$500** IN LOYALTY BONUS

OFFER ENDS JANUARY 2ND, 2025.

NISSAN



**WINTER READY** EVENT



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# மக்கள் சேவையாற்ற அரசியலுக்கு வந்தவர்கள் எவ்வாறு செல்வந்தர்களாக முடியும்?

## அதற்குரிய சாதகமான வழிகள் ஆட்சி பீடங்களுக்குள் உள்ளனவா?

ஒரு தேசத்தில் அரசியலும் அங்கு ஆட்சி அதிகாரங்களைக் கொண்ட பாராளுமன்றம் போன்றவையும் மக்களுக்கு சேவையாற்றவென தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு உரியவை என்ற அடிப்படைக் கருத்து உலகெங்கும் நிலவி வருகின்றது. இவ்வாறு மக்களுக்கு சேவையாற்றக்கூடியவர்களை வாக்களித்து ஆட்சி பீடத்திற்கு அனுப்புகின்ற மக்கள் மீண்டும் அவர்களின் வருகைக்காக அடுத்த தேர்தல்வரையும் காத்திருக்க வேண்டியிருக்கும் என்பது போன்ற "நகைச்சுவை உரையாடல்கள்" எம் செவிகளுக்கு வந்து போவதும் உண்டு.

ஆனால் உலகின் தென்னாசிய நாடுகளில் ஆட்சி பீடம் ஏறியவர்கள் மிகக் குறுகிய காலத்தின் அந்தந்த நாடுகளின் செல்வந்தர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளதை கேள்வியுற்றும் அவை தொடர்பாக "கேள்விகள்" எதனையும் முன்வைக்காமல் மீண்டும் மீண்டும் அவர்களை அரசியல் உயர் பீடங்களில் அமர்த்துவதற்காக உழைப்பதையும் பின்னர் உள்ளம் சோர்வடைந்து இன்னுமொரு அரசியல்வாதிக்கு "பின்னால்" அணி திரண்டு நிற்பதையும் நான் எம் கண்களால் காண்கின்றோம்.

இவ்வாறு அரசியல்வாதிகளால் வங்குரோத்து வரைக்கும் கொண்டு செல்லப்பட்ட நாடுகளில ஒன்றான இலங்கையில் அரசியல் பீடங்களில் தொடர்ச்சியாக அமர்ந்திருப்பவர்கள், அல்லது தோற்கடிக்கப்பட்டவர்கள் அல்லது நிராகரிக்கப்பட்டவர்கள் என அனைவருமே, தொடர்ச்சியாக தங்கள் சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருப்பதையே விரும்புகின்றார்கள் என்பதை நாம் நீண்ட காலமாக அவதானித்து வருகின்றோம்.

எமது இலங்கையில் வடக்கிலோ, கிழக்கிலோ அன்றி தெற்கிலோ உழைக்கும் வர்க்கத்தினர் என்று அழைக்கப்பெறும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த அரச ஊழியர் ஆகியோர் தொடர்ச்சியாக தங்கள் வாழ்க்கையை நடத்தவோ அன்றி தங்கள் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கோ துன்பத்தின் உச்சத்திற்குச் சென்று விடிவு கிட்டாமல் தவிக்கையில் எவ்வாறு இந்த முன்னாள் அரசியல்வாதிகள் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் "தக்க வைத்துக்கொண்டு" வசதியான வாழ்க்கையை தொடர்கின்றார்கள் என்பதை எமது தேசத்தின் மக்களில் அதிகமானவர்கள் உணர்ந்து கொண்டுள்ளார்களா என்ற கேள்வியும் எழுந்துநிற்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஜனாதிபதிகள் ,பிரதமர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்கள் அதிகம். இந்த சிறப்புரிமைகள் ,வரப்பிரசாதங்கள் முன்னா ஜனாதிபதிகள் ,பிரதமர்களுக்கும் அன்று முதல் இன்றுவரை ஆட்சியிலுள்ள அரசுகளினால் வழங்கப்பட்டே வருகின்றன. முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமருக்கு வழங்கப்படும் இந்த சிறப்புரிமைகள் ,வரப் பிரசாதங்களுக்காக வருடமொன்றுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபா செலவிடப்பட்டு வருகின்றது. இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த யுஎன்பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் மாறி மாறி ஆட்சிகளில் இருக்கும் போது தங்கள் எதிராக உள்ள அரசியல்வாதிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். அனால் அவர்கள் அனுபவிக்கும் சுகபோக வாழ்க்கையினால் "பலிக்கடாக்கள்" ஆகின்றவர்கள் பொதுமக்களே என்பதை எவரும் கவனிப்பதே இல்லை.

இவ்வாறான நிலையில்தான் ""மாற்றம்""என்ற கோசத்துடன் ஆட்சியைகைப்பற்றிய அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு செலவுகுறைப்பு என்ற பெயரில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்களில் கை வைத்துள்ளது. மக்களின் வரிப்பணத்தை வீண் செலவுகளிலிருந்து பாதுகாக்கவே இந்த நடவடிக்கை என அநுரகுமார அரசு காரணமாகக் காட்டும் நிலையில் இது மஹிந்த ராஜபக்சவை இலக்குவைத்து அநுர அரசு நடத்தும் அரசியல் பழிவாங்கல் என ராஜபக்ச தரப்பினரும் அவர்களது கட்சியினரும் குற்றம் சுமத்துகின்றனர்

முன்னாள் ஜனாதிபதிகள் அரச மாளிகைகளிலிருந்து வெளியேற வேண்டும் என அநுர குமார அரசு விடுத்துள்ள அறிவிப்புக்கு நாட்டு மக்களிடையிலும் அரசியல்வாதிகளிடையிலும் ஆதரவும் எதிர்ப்பும் காணப்படுகின்றன.நாட்டுக்கு சேவை செய்த முன்னாள் ஜனாதிபதிகளுக்கான கௌரவத்தை அரசு தொடர்ந்தும் வழங்க வேண்டுமென ஒருதரப்பினரும் மக்களின் வரிப்பணத்தை இவர்களின் ஆடம்பரங்களுக்கு செலவிடக்கூடாதென இன்னொரு தரப்பினரும் வாதிட்டு வருகின்றனர்.

ஆனால் அநுரகுமார அரசின் இந்த பிரசாரங்களுக்கு ,சேறுபூசும் வேலைகளுக்கு ""நான் மஹிந்த ராஜபக்ச""என ஒற்றை வரியில் பதிலளித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளதுடன் குறிப்பிட்ட வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என அநுரகுமார அரசு எனக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தால் அந்தவீட்டிலிருந்து அடுத்த நிமிடமே வெளியேறத் தயார் எனவும் அறிவித்துள்ளார்.ஏனெனில் அவ்வாறு அநுரகுமார அரசனால் உத்தியோகபூர்வமாக அறிவிக்க அரசியலமைப்பில் இடமில்லை என்பது மஹிந்த ராஜபக்சவுக்கு தெரியும்.

இவ்வாறு தான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சம்பந்தன் அவர்களுக்கும் வசதிகள் பல நிறைந்த விசாலமான மாளிகை ஒன்றை வழங்கிய மகிந்த ராஜபக்சாவிற்கு தனது விசுவாசத்தை இறுதி வரையிலும் காட்டிய சம்பந்தன் அவர்களின் இறுதிக்கிரியைகள் கூட அங்கு தான் இடம்பெற்றன. ஆனால் தமிழ் மக்களுக்குத் தான் சம்பந்தர் அவர்களின் சேவை பூரணமாகக் கிட்டவில்லை.

இந்த விடயம் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள் என அனைவருக்கும் நன்கு பொருந்தும் என்பதும் மக்களுக்குத் தெரிந்திருந்தது.



Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?

Not to Worry!
Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

**பத்திரிகை விநியோகம் செய்ய ஆட்கள் தேவை**

வாரம் ஒரு தடவை வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைப் பிரதிகளை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையையும் ஸ்காபுறோ, மார்க்கம், ரொறன்ரொ ஆகிய நகரங்களில் உள்ள தமிழர் கடைகள் மற்றும் ஆலயங்கள் ஆகியவற்றுக்கு விநியோகம் செய்ய ஒருவர் தேவை. சொந்தமாக வாகனம் வைத்திருப்பது விரும்பத்தக்கது. தகுந்த ஊதியம் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 647 762 9512

**Telemarketers Wanted**

தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய Telemarketers உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு:-
416 754 9492 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

**COOKS, KITCHEN HELPER ஆகியோர் தேவை**

மார்க்கம் நகரத்தில் உள்ள **Chauhan's India grill house and Banquet** உணவகத்திற்கு **Looking Line cook/ Breakfast and Lunch Line cook, delivery service Part time.**
**Kitchen helper and dishwasher P/T** ஆகியோர் உடனடியாகத் தேவை.
416 988 9518 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

# மன்னார் நீதிமன்றத்திற்கு முன் துப்பாக்கிச்சூடு சம்பவம் – மேலும் ஒரு சந்தேக நபர் யாழ்ப்பாணத்தில் கைது

இலங்கை செய்திகள்
Sri Lanka News
மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (03-01-2025)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபர் 3ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் பெரியவிளான் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய குறித்த சந்தேக நபர் யாழ்ப்பாணம் - பெரியவிளான் பகுதியில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை வியாழக்கிழமை (16) மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள இருந்தது.

இந்நிலையில் விசாரணைகளுக்காக சென்ற சந்தேக நபர்கள் மூவர் உள்ளடங்களாக நான்கு நபர்கள் மீது நீதிமன்றத்திற்கு முன் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் இராணுவத்துடன் தொடர்புடைய மூவர் உள்ளடங்களாக பலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விசேட அதிரடிப்படை மற்றும் யாழ்ப்பாண பொலிஸார், புலனாய்வு பிரிவினரால் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் மன்னாருக்கு அழைத்து வரப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு



- எஸ்.ஆர்.லெம்பேட் (03-02-2025)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் 3ம் திகதி திங்கட்கிழமை உத்தரவிட்டது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மன்னாருக்கு தெற்கு கடற்பரப்பில் இழுவைப் படகு ஒன்றில் மீன் மிடித்துக்கொண்டிந்த 10 இந்திய மீனவர்களை 3ம் திகதி அன்று திங்கட்கிழமை அதிகாலை இலங்கை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தாழ்வுபாடு கடற்படை முகாமில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் 3ம் திகதி அன்று திங்கட்கிழமை மதியம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# விவசாயிகளை பாதிக்காத வகையில் அரசாங்கம் நெல்லுக்கு அதிகூடிய விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.




- எஸ்.ஆர்.லெம்பேட் (03-02-2025)

அரசாங்கம் வடக்கு கிழக்கில் உள்ள விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு இது வரை உரிய தீர்வை பெற்றுக் கொடுக்கவில்லை என்றும், பல்வேறு பாதிப்புகளுக்கு மத்தியில் விவசாய செய்கையை முன்னெடுத்துள்ள விவசாயிகளின் நெல்லுக்கு உரிய நிர்ணய விலையை தீர்மானிக்க அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 3ம் திகதி அன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் தொடர்ந்தும் விவசாயிகள் மீது கருணை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. விவசாயிகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தத்தினால் பாரிய அழிவுகளை சந்திக்கின்றனர்.

எனினும் தமது பாதிப்பிற்கு நியாயமான தீர்வை தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் அதே நேரம் அரசாங்கம் விவசாயிகளின் நெல்லின் விலையை நிர்ணயம் செய்யும் நிலையில் அவரது சிந்தனை இருக்கவில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

பொறுப்பான அமைச்சர் நெல்லின் நிர்ணய விலையை அறிவிப்பதாக கூறுகின்ற அதே நேரம் அனுராதபுரம் மற்றும் ஏனைய பகுதிகளில் நெல் அறுவடை முடிந்த பின்னரே நெல்லுக்கு நிர்ணய விலையை தாம் தெரிவிப்பதாக கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் உள்ள விவசாயிகள் மாத்திரமே விவசாயிகள் என்றும் வடக்கு கிழக்கில் உள்ள விவசாயிகளை விவசாயிகள் போல் தெரியவில்லையா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

நெல்லுக்கான நிர்ணய விலையை அரசாங்கம் குறைவாக நிர்ணயிக்க உள்ளதாக அறிகிறோம். இதனால் விவசாயிகள் விவசாயத்திற்காக செலவு செய்த முதலீடுகளை மீள பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். எனவே அரசாங்கம் விவசாயிகள் நஷ்டத்தை எதிர் நோக்காத வகையில் கூடிய விலை நிர்ணயத்தை தீர்மானிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யவில்லை என்றால் ஏனைய தனியார் நெல் கொள்வனவு செய்கின்றவர்கள் அரசாங்கத்தை விட மிகவும் குறைவாகவே நெல்லை பெற்றுக்கொள்ள விலையை அவர்கள் தீர்மானிப்பார்கள். எனவே கூடிய அளவிலான விலையை நெல்லுக்கு அரசாங்கம் தீர்மானிக்கின்ற போது தனியார் நெல் கொள்வனவு செய்கிறவர்களும் கூடுதலான விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வார்கள்.

விவசாயத்திற்காக விவசாயிகள் வங்கிகளில் கடனை பெற்றும் நகைகளை வங்கியில் அடமானம் வைத்தும் பணத்தை பெற்று விவசாயத்தை முன்னெடுத்துள்ளனர். வறுமைக்கோட்டின் கீழ் உள்ள விவசாயிகளை நாங்கள் தூக்கி விடுவதாக இருந்தால் அவர்களின் நெல்லுக்கான உரிய விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

எனவே புதிய அரசாங்கம் சாட்டுப்போக்கு கூறாமல் நெல்லின் விலையை நிர்ணயம் செய்து அழிவில் இருந்து கொண்டுள்ள விவசாயிகளை தூக்கி விட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது என தெரிவித்தார்.

இதே வேளை மூன்று கட்சிகளின் ஒற்றுமையான செயல்பாடு, தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு, இந்திய மீனவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் அவர் மேலும் கருத்துக்களை தெரிவித்தார்.

# மன்னார் வங்காலை கிராமத்தில் கடற்கரை பகுதியில் கணிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழுவை திருப்பி அனுப்பிய குழுவினர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (04-02-2025)

மன்னார் வங்காலை கிராமத்தில் கடற்கரை பகுதியில் 04-01-2025 அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை கணிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழு ஒன்றை அக்கிராம மக்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றி உள்ளனர்.

அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணியளவில் கணிய மணல் ஆராய்ச்சிக்காக குழு ஒன்று நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட வங்காலை கிராமத்தில் கடற்கரை பகுதியில் கணிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்துள்ளனர்.

கிராமத்தில் உள்ள எந்த தரப்பிடமும் எவ்வித அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் சுமார் 20 பேர் அடங்கிய குழுவினர் அவ்விடத்திற்கு வருகை தந்து கணிய மண் ஆராய்ச்சியை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் சந்தேகம் கொண்ட கிராம மக்கள் அவ்விடத்திற்கு சென்று அவர்களுடன் விசாரணைகளை முன்னெடுத்த போது, இதாம் பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்துள்ளதாகவும், கணிய மண் ஆராய்ச்சியை மேற்கொண்டு ஆராய்ச்சி வெற்றி பெற்றால் கணிய மணல் அகழ்வு முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அக்கிராம மக்கள் உடனடியாக வங்காலை பங்குத்தந்தை அருட்தந்தை லக்கோன்ஸ் அடிகளாரின் கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் அருட்தந்தை சம்பவ இடத்திற்கு வருகை தந்தார்.

ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழுவுடன் ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி ஒருவரும் வருகை தந்திருந்தார்.

தாங்கள் உரிய அனுமதியை பெற்று கொண்டு வருகை தந்ததாக குறித்த குழுவினர் தெரிவித்த போதும் எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாத நிலையில் அவர்கள் வருகை தந்தமை தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கணிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குறித்த குழுவினர் அங்கிருந்து சென்றனர்.

மன்னார் தீவு பகுதியில் முன் னெடுக்கப்பட்டு வருகின்ற கணிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை முன்னெடுத்து வரும் நிலையில் மன்னார் தீவுக்கு வெளியில் பெருநிலப்பரப்பில் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கை முன்னெடுக்க இருந்தரமை அக்கிராம மக்கள் மத்தியில் பாரிய விசனத்தை ஏற்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தின் பண்பாடுகளை பறைசாற்றும் வகையில் செயற்பட்ட பழைய மாணவர்களை!

**பு. கஜிந்தன்**



யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் மாட்டுவண்டி பவனி ஒன்று 2ம் திகதி அன்றறையதினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றுகூடலின்போது, 2010ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களின் ஏற்பாட்டில் இந்த மாட்டுவண்டி பவனி முன்னெடுக்கப்பட்டது.



பவனியில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகளை சுற்றி பவனியாக வலம் வந்தபோது வீதியில் சென்ற மக்கள் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு உற்சாகமூட்டுவதை அவதானிக்க முடிந்தது. தமிழர்களின் பாரம்பரியத்தை பேணிக்காப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளின் ஈடுபடுகின்ற பழைய மாணவர்களை பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.




# தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம்கோப்பாயில் திறந்து வைக்கப்பெற்றது!

தேசிய மக்கள் சக்தியின் மேலும் ஒரு பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் 3ம் திகதி அன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கோப்பாய் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் சந்திரகேசரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், எஸ்.ஸ்ரீ. பவானந்தராஜா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், கட்சி உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

மக்களின் நலன் கருதி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக இந்த அலுவலகம் இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.



# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் வெற்றிகரமாக நடைபெற்ற இரத்ததான முகாம்!




மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று 04-02-2025 செவ்வாய்க்கிழமையன்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் திரு. சீ.இந்திரகுமார் தலைமையில் இந்த இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினரால் குருதி சேகரிப்பு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், விசேட அதிரடிப் படையினர், நலன்விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு 60 பேர் குருதிக்கொடை வழங்கினார்கள்.




இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் அத்தியட்சகர், பிரதான ஜெயிலர், ஏனைய ஜெயிலர்கள், புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள், சரயன்கள், உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி திருமதி. தாரணி, பொது சுகாதார பரிசோதகர் ரவீனதாஸ், தாதியர்கள் சுகாதார ஊழியர்கள், செஞ்சிலுவை சங்கம் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

Dr. Pushpa.V & Associates
Dentist

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900



# கடந்தகால ஊடக அடக்குமுறைகளுக்கு நீதிவேண்டும் என ரவிகரன் எம்.பி பாராளுமன்றத்தில் வலியுறுத்து

இலங்கை செய்திகள்
Sri Lanka News

- நடராசா லோகதயாளன்

கடந்தகாலங்களில் இந்தநாட்டில் ஊடகத்துறையின்மீது மேற்கொள்ப்பட்ட அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கு முறையான நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டுமெனவும், அதேவேளை ஊடகத்துறையின் சுதந்திரமும், சுயாதீனத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றில் 05.02.2025 அன்று இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று சொல்லப்படுகின்ற ஊடகத்துறை நசுக்கப்படுகின்ற அவல நிலையே தொடர்கின்றது.

அந்தவகையில் கடந்த போர்க்காலப்பகுதியில் பல ஊடகவியலாளர்களும், ஊடகப் பணியாளர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். ஊடகவியலாளர்கள் பலர் கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பல ஊடகவியலாளர்களும் ஊடகப்பணியாளர்களும் இந்த நாட்டில் தமக்கு இருந்த அச்சுறுத்தல் நிலைகளால் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இதனைவிட ஊடகநிறுவனங்கள்மீது தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக தராகி சிவராம், மயில்வாகனம் நிமலராஜன், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், ஐயாத்துரை நடேசன், லசந்த விக்கிரமதுங்கபோன்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கடந்த காலத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதை உதாரணமாகச் சொல்லமுடியும்.

யாழ்ப்பாணத்தைத் தளமாகக்கொண்டியங்கும் உதயன் பத்திரிகை நிறுவனம், சிரச ஊடக வலையமைப்பின் தெபானாம கலையகம் என்பன கடந்த காலங்களில் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டன.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம்திகதி ஹோமாகம நகரில் பிரகீத் எக்னெலிகொட என்ற ஊடகவியலாளர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். வடக்குக் கிழக்கில் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையும் உறவுகளைப்போலவே அவரது குடும்பமும், கடந்த ஒன்றரைத் தசாப்தகாலமாக காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதிகேட்டு தொடர்ந்து போராடிவருகின்றனர்.

இந் நிலையில் முன்னாள் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்சவின் உத்தரவிற்கு அமைவாகவே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதாக தன்னை முன்னாள் கடற்படைவீரர் என அடையாளப்படுத்தும் ஆர்.பி.டி.பி.பிரசன்ன பியசாந்த என்பவர் அண்மையில் சுதா கிரியேசன்ஸ் எனும் யூடியூப் தளத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார். இதனை ஆராயுங்கள்.

இந் நிலையில் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசு இதுதொடர்பில் அவரது குடும்பத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை போருக்குப் பின்பு, தற்போதும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற, அச்சுறுத்தப்படுகின்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

தற்போது ஊடகவியலாளர்கள் பொலிசார், புலனாய்வாளர்கள், இராணுவத்தினர், சட்டவிரோத தொழில்களில் ஈடுபடும் நபர்கள் எனப் பல்வேறு தரப்புக்களாலும் அச்சுறுத்தப்படும் நிலமைகள் காணப்படுவதாக ஊடகவியலாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில் கடந்த 2024.12.26 வியாழக்கிழமையன்று கிளிநொச்சி ஊடகஅமையத்தின் செயலாளரும், சுயாதீன ஊடகவியலாளருமான முருகையா தமிழ்ச்செல்வன் என்னும் ஊடகவியலாளரை, கிளிநொச்சி ஏ(9) வீதியில்வைத்து வாகனத்தில்வந்தவர்கள் கடத்த முற்பட்டுள்ளனர். கடத்தல் முயற்சி கைகூடாமல்போகவே அவரைக் கடுமையாக தாக்கியதுடன் எச்சரித்துவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். இதற்கு கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு தாக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதுடன், குற்றவாளிகளுக்கு மிகவும் கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும்.

தேவேளை அண்மையில் ஊழல்மோசடிதொடர்பில் செய்திவெளியிட்டமைக்காக கிளிநொச்சியைச்சேர்ந்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் பாஸ்கரன் ஊழல்மோசடியுடன் தொடர்புடைய குழுவினால் அவருடைய வீட்டு நுழைவாயில் சேதப்படுத்தப்பட்டதுடன், மிகக் கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஜனவரிமாதத்திலேயே கூடுதலாக ஊடகவியலாளர்களுக்கு பல்குற்றங்கள் இழைக்கப்பட்டன. இந் நிலையில் ஆண்டுதோறும் ஜனவரி 31ஆம் திகதியில் கறுப்பு ஜனவரிதினம் ஊடகவியலாளர்களால் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. இம்முறையும் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஜனவரி என்பது ஊடகவியலாளர்கள் விடயத்தில் இன்னமும் கறுப்பாகவே உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மரக்கடத்தல்கள் இடம்பெறுவதாக பலரும் சுட்டிக்காடியபோது செய்கதி சேகரிக்கச்சென்ற கணபதிப்பிள்ளை குமணன், சண்முகம் தவசீலன் ஆகியஊடகவியலாளர்கள் மரக்கடத்தல்காரர்களால் தாக்கப்பட்டனர்.

பிறிதொருதடவை முல்லைத்தீவு ஊடகஅமையத்தினுள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாதவர்கள், ஊடகஅமையத்தின் செயற்பாடுகள்குறித்து கடுமையாக விசாரித்துள்ளனர். இத்தோடு முல்லைத்தீவு குருந்தூர்மலையில் செய்திசேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் பொலிசாரால் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டிருந்தார். இப்படியாகப் பல சம்பவங்கள் உள்ளன. அனைத்தையும் சொல்வதற்கு நேரம்போததாது வவுனியா, மன்னாரிலும் ஊடகவியலாளர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர்.

தயவுசெய்து புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம் வலிகளை உணர்ந்தவர்கள். ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தையும், அவர்களின் சுயாதீனத்தன்மையையும் உறுதிப்படுத்தவேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு போரை நடத்திய இலங்கை இராணுவம் தொடர்ந்து, அவர்கள் அந்த மனநிலையில் இருந்து வெளியே வரவில்லை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 06-02-2025 அன்றையதினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை



பிரிவினைகளை ஏற்படுத்தும் இனவாத நடவடிக்கைகளிலேயே இராணுவம தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது என்று தொடர்ச்சியாக நான் சொல்லிவருகிறேன். தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் ஒரு போரை நடத்தியதோடு, அவர்கள் அந்த மனநிலையில் இருந்து வெளியே வரவில்லை. தமிழ் நலன்களுக்கு எதிரான மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு நிறுவனமாகவே இராணுவம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது என்பதை பொறுப்புடன் கூறுகிறேன்.

தையிட்டியில் சட்டவிரோத திஸ்ஸ விகாரையை கட்டுவதில் இராணுவத்தினர் எவ்வாறு செயற்பட்டனர் என்பது இதற்கு சிறந்த உதாரணமாகும். அப்போதைய இராணுவத் தளபதியால் தனியாருக்குச் சொந்தமான காணியில் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. அடிக்கல் நாட்டப்பட்ட சில நாட்களிலேயே மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்விடயம் விவாதிக்கப்பட்டது. அதில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர், தெல்லிப்பளை பிரதேச செயலர், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டு, தையிட்டி திஸ்ஸ விகாரையானது தனியார் காணியில் இருப்பதும், இந்த காணியானது எந்த விகாரைக்கும் சொந்தமானது அல்ல என்பதையும் உறுதிப்படுத்தியிருந்தனர். குறித்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மேற்கொண்டு எந்தவொரு கட்டுமான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்றும், கட்டுமான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்த நிலையிலும், இராணுவமே சட்டவிரோத விகாரையை கட்டியது.

குறித்த விடயம் தொடர்பாக - 2024 டிசம்பர் 13 ஆம் திகதிய கௌரவ கடற்றொழில் அமைச்சர் திரு. சந்திரசேகரன் அவர்கள் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிய மேன்மைதங்கிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய போதும் மீண்டும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அப்போது தையிட்டி திஸ்ஸ விகாரை கட்டப்பட்டுள்ள நிலம் தனியாருக்கு சொந்தமான நிலம் என்றும், எந்தவொரு முறையான சட்ட நடைமுறையும் இன்றி, சட்ட விரோதமாகவே விகாரை கட்டப்பட்டது என்றும், இவ்விடயம் குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டிருந்தேன்.

இந்த நாடாளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தலைவரிடம் புதியதொரு விடயத்தைக் கொண்டுவருகின்றேன். அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் எழுதிய கடிதம் தொடர்பாக இன்றைய உதயன் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அவ்விடயம் தொடர்பான கடிதத்தை இன்று சபையில் சமர்ப்பிக்கிறேன். அக்கடிதத்தில் சந்திரா நிமல் வாக்கிஸ்கா என்பவர் அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தலைவர் என்று அவரது கையொப்பம் இடப்பட்டுள்ளது.

தையிட்டி திஸ்ஸ விகாரைக் கட்டுமானமுள்ள 6 ஏக்கர் காணியும், உண்மையில் தனியாருக்குச் சொந்தமானதான இருக்கும் நிலையில், சட்டவிரோத விகாரை அமைக்கப்பட்டுள்ள இடம் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் இருந்து திஸ்ஸ விகாரைக்கு சொந்தமானது எனவும், திஸ்ஸ விகாரைக்கு 14 ஏக்கர் காணி இருந்ததெனவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, தனியாருக்குச் சொந்தமான காணிகளையும், அதனுடன் சேர்த்து மேலும் பல ஏக்கர் நிலத்தையும் பறிமுதல் செய்து வழங்க வேண்டும் என்றும், தனியாருக்கு சொந்தமான காணிகளை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கௌரவ குழுக்களின் பிரதித் தலைவரே, இராணுவம் ஒரு இனவாத கட்டமைப்பில் செயற்படுகின்றது என்று நான் குறிப்பிடுவது இதனால்தான். அது அதன் மனநிலையையிலிருந்து மாற்றவில்லை. நான் கூறும் கூற்றுக்களில் ஓரளவு உண்மை இருப்பதாக நீங்கள் கருதினால் நீங்கள் சட்டபூர்வ செயல்முறையொன்றுக்கு செல்ல வேண்டும். இராணுவமென்றால் எந்தச் சட்டத்தையும் மீறலாம் என்ற நிலை இருக்கமுடியாது. காட்டுச் சட்டங்களைப் பிரயோகிக்க முடியாது. ஆனால் இன்னும் அந்த அடிப்படையிலேயே அவர்கள் செயற்படுகிறார்கள்.

இந்தக் கடித்தை எழுதியிருந்த அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் தற்போதைய தலைவர் யார் என்று நான் தேடியபோது, அவர் தேசிய புலனாய்வு பிரிவின் முன்னாள் பணிப்பாளராகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் செயற்பட்ட ஒருவராவார். எனவே, இங்கே ஒழுங்கமைக்கப்படும் இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளின் இணைப்பை நீங்கள் பார்க்கலாம்.

இந்த அரசாங்கம் இனவாதக் கொள்கைகளை பின்பற்றப் போவதில்லை என்றும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டப் போகிறது என்றும் கூறிய உறுதிமொழிகளுக்கு உண்மையாக இருக்குமாயின் சட்டம் நியாயமானதாக இருக்க வேண்டும். எவரும் சட்டத்தை மீறுவதற்கு அனுமதிக்க முடியாது.

எனவே - தனியார் காணிகளில் கட்டப்பட்ட இந்த தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை விவகாரத்தை எப்படி கையாள்கிறது என்பதை பொறுத்தே இந்த அரசாங்கம் இனவாதமுடையாதா? இல்லையா? என்பது புலப்படும். திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான நிலத்தில் விகாரை அமைக்கக் கூடியதாக இருந்தும், இந்தச் சட்ட விரோதச் செயலுக்காக தனியாருக்குச் சொந்தமான நிலத்தை அபகரிக்க அவர்கள் தேர்வு செய்திருப்பது விரும்பத்தகாத ஒன்றாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# கடல் வளத்தை பாதுகாக்க விசேட வேலைத்திட்டம் உருவாக்கப்படும் என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

புு. கஜிந்தன்





எமது நாட்டுக்குரிய கடல் வளம் நிச்சயம் பாதுகாக்கப்படும் எனவும், அதற்கான விசேட வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படும் எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல்வளைத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். அல்லைப்பிட்டிய பகுதியில் வெண்புரவி புனித அந்தோனியார் கடற்றொழில் கிராமிய அமைப்பின் ஏற்பாட்டில், அமைச்சருக்கான வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் பங்கேற்றிருந்த அமைச்சருக்கு மக்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், அவர்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது தமது பகுதியில் கடல் அரிப்பை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன், மீனவர்கள் இளைப்பாறுவதற்கு உரிய வசதிகள் இல்லை எனவும், உரிய வகையில் நங்கூரமிடும் ஏற்பாடு உட்பட கடற்றொழிலை உரிய வகையில் முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்துதருமாறு அமைச்சரிடம் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை, ரோலர் படகு பயன்பாடு உள்ளிட்டவற்றால் தமக்கு ஏற்படும் வாழ்வாதார பாதிப்புகள் பற்றியும் மக்கள் எடுத்துரைத்தனர்.

மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

அத்துடன், இலங்கையின் கடல்வளத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தமது அரசாங்கத்தின் முதன்மை நோக்கங்களுள் ஒன்றாகும் எனவும், அதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.



தனக்கான வரவேற்பு நிகழ்வை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த வெண்புரவி புனித அந்தோனியார் கடற்றொழில் கிராமிய அமைப்பினருக்கு அமைச்சர் நன்றிகளையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், மீனவ சங்க தலைவர் ஞா.அன்டன், பங்குதந்தை ஜெகன்குமார் கூஞ்ஞ, கிராம சேவகர் ம.சசிகாந், பிரதேச செயலாளர் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# வேலை கிடைக்கவில்லை என்ற விரக்தியில் யாழ்ப்பாணத்தில் பட்டதாரி இளைஞன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

வேலை கிடைக்கவில்லை என்ற விரக்தியில் யாழ்ப்பாணத்தில் பட்டதாரி இளைஞன் தவறான முடிவெடுத்து தனது உயிரைப் பறித்துக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில், வேலை கிடைக்கவில்லை என்ற விரக்தியில் 04-02-2025 அன்றையதினம் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார். இவ்வாறு யாழ்ப்பாணம் - கைலாச பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த தங்கவேல் விபுசன் (வயது 28) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர். இருப்பினும் இரண்டு வருடங்களாக வேலை கிடைக்காத காரணத்தால் அன்றையதினம் தனது வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.


அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# மாவை சேனாதிராஜாவிடமிருந்து கற்றுக்கொள்வது

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**





ஈழத்தமிழ் அரசியலில் அரசியல் நாகரீகம் குறைந்து கொண்டே போகிறது.தமிழ் அரசியலில் மூத்த கட்சியாகிய தமிழரசு கட்சியின் வயது 75. அந்தக் கட்சிக்குள் மாவை சேனாதிராஜாவின் வயது 62. அதாவது கட்சியின் மிக மூத்த உறுப்பினர்களில் ஒருவர். ஆனால் அவரை அவருடைய வயதில் அரைவாசியை விடக் குறைவான கட்சிக்காரர்கள் அவமதித்திருக்கிறார்கள். மிகக் கீழ்த்தரமான வார்த்தைகளால் அவரை புண்படுத்தியிருக்கிறார்கள். அதை ஏனைய மூத்த உறுப்பினர்கள் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள்.

இந்த அவமரியாதைகளின் விளைவாகத்தான் மாவை இறந்தாரா இல்லையா என்ற பிரேத பரிசோதனைக்குள் செல்வது எனது நோக்கம் அல்ல. ஆனால் இந்த அவமரியாதைக்கு பழி வாங்குவதாகக் கூறிக்கொண்டு மாவையின் இறுதிக் கிரியையின் போது சுடலைக்குள் ஒரு பனர் கட்டப்பட்டிருந்தது. அந்த பனரில் மாவையின் சா வீட்டுக்கு யார் யார் வரக்கூடாது என்ற பொருள்பட வசனங்கள் எழுதப்பட்டு குறிப்பிட்ட நபர்களின் ஒளிப்படங்களும் அச்சிடப்பட்டிருந்தன.

தமிழ் அரசியல் நாகரீகம் சுடலைக்குள்ளும் உட்கட்சிச் சண்டையைக் கொண்டு வந்து விட்டது. எது புத்தரை ஞானி ஆக்கியதோ, அதாவது நிலையாமை, அந்த நிலையாமையை உணர்த்தும் சுடலைக்குள்ளும் கட்சியின் உட் சண்டை வந்துவிட்டது.

இது தமிழரசுக் கட்சிக்குள் மட்டும் நடக்கவில்லை. முழுச் சமூகத்திலும் நடக்கின்றது. 2009க்கு பின்னரான ஈழத் தமிழ் கூட்டு உளவியல் என்பது அவ்வாறுதான் மாறி வருகிறது. மூத்தவர்களை மதியாமை; முதிர்ச்சியானவர்களை மதியாமை; துறைசார் ஞானமுடையவர்களை மாதியாமை; முன்னோடிகளை இகழ்வது; சமூகத்தில் ஏதோ தன்னாலியன்ற நற்காரியங்களைச் செய்யும் பிரபல்யமானவர்களை இகழ்வது; எல்லாவற்றையும் மீம்ஸ் ஆக்குவது; எல்லாவற்றையும் பகிடியாக்கிக் கடந்து போவது.. என்ற ஒரு போக்கு அதிகரித்து வருகிறது. இதற்கு தொழில் நுட்பம் மட்டும் காரணமல்ல. ஆயுத மோதல்களுக்கு பின்னரான கூட்டு உளவியலே பிரதான காரணம். தொழில்நுட்பம் அதில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துகின்றது. அவ்வளவுதான்.

சில மாதங்களுக்கு முன்பு மாவீரர் நாளை யொட்டி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராகிய காக்கா ஒரு ஊடகச் சந்திப்பை நடத்தியிருந்தார். அந்தக் காணொளிக்குக்கு கீழே ஒருவர் போட்டிருந்த குறிப்பை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். அவர் ஒரு நிதானமான மனிதர். எனினும் அவருடைய குறிப்பு பின்வரும் பொருள்பட அமைந்திருந்தது. "ஒரு மூத்த உறுப்பினர் என்பதைத் தவிர காக்கா வேறு என்ன செய்திருக்கிறார்?" ஒரு மூத்த உறுப்பினர் என்றால் யார்? காக்காவை விமர்சித்தவரின் தாய் தந்தையருடைய வயதுக்காரர்கள் போராட்டத்தைக் குறித்துச் சிந்திக்காத ஒரு காலச் சூழலில் போராடப் போனவர் என்று பொருள். அந்த நபரின் தாய் தந்தையருடைய வயதுக்காரர்களில் பெரும்பாலானவர்கள் சமூகத்துக்காக தங்களை அர்ப்பணிக்கத் துணியாத ஒரு காலகட்டத்தில் தன்னை அர்ப்பணிக்கத் முன்வந்த ஒருவர் என்று பொருள். இப்போதுள்ள ஜனாதிபதி அனுரா சிங்கள மக்களுக்காகப் போராடப் போக முன்னரே தமிழ் மக்களுக்காகப் போராடப் போன ஒருவர். இன்றைக்கு பஷீர் காக்கா கூறும் கருத்துக்கள் சில கட்சிகளுக்கோ அரசியல் செயற்பாட்டாளர்களுக்கோ பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அவருக்கென்று ஒரு பெறுமதியான இறந்த காலம் உண்டு. அதைக் கவனத்தில் எடுத்துத்தான் அடுத்த தலைமுறை கருத்து கூறலாம். இவ்வாறு சமூகத்தில் மூத்தவர்களையும் முன்னோடிகளையும் சமூகத்துக்காகத் தங்களை அர்ப்பணிக்கத் தயாராக இருந்தவர்களையும் அடுத்த தலைமுறை அவமதிக்குமாக இருந்தால் இது எங்கே கொண்டு போய்விடும்? ஒரு சமூகம் அதன் தொடர்ச்சியை இழந்து விடும். தொடர்ச்சியை இழப்பது என்பது வரலாற்றை இழப்பதுதான்.

தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் அதுதான் நிலைமை. துவாராகவை முன்னிறுத்தி நிகழும் வாதப் பிரதி வாதங்களைப் பார்த்தால் அது தெளிவாகத் தெரிகிறது. சீமானை முன்னிறுத்தி நிகழும் வாதப் பிரதி வாதங்களும் அதைத்தான் காட்டுகின்றன. ஒரு இயக்கத்தின் ஆதரவாளர்களும் அபிமானிகளும் இரு வேறு அணிகளாக நின்று மோதிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இயக்கத்தின் தலைவருடைய குடும்பத்துக்குள்ளேயே இரண்டு அணிகள் உருவாகிவிட்டன. இரண்டும் பொதுப் பரப்பில் மோதிக் கொள்கின்றன. ஊடகங்கள் அதை மேலும் ஊதிப் பெருப்பிக்கின்றன. தமிழ்ச் சமூகம் தானே தனக்குள் முட்டி மோதிக் கொள்ளும் ஒரு சமூகமாக, தன்னைத்தானே நம்பாத ஒரு சமூகமாக, தானே தன்னை வெறுக்கும் ஒரு சமூகமாக எப்பொழுது மாறியது?

உளவியலில் என்ற ஒரு ஆங்கில பதம் உண்டு. Pistanthrophobia "பிஸ் டாந்ரோ ∴.போபியா". அதன் பொருள் யாரையும் நம்புவதற்கு பயம். இறந்த காலத்தில் ஏற்பட்ட எதிர்மறையான, கசப்பான அனுபவங்களின் விளைவாக மற்றவர்களை நம்பாமை. அல்லது மற்றவர்களை நம்புவதற்கு பயப்படுவது. (An irritational fear of trusting others, typically resulting from previous negative experiences) போருக்குப் பின்னரான கூட்டு மனவடுக்களின் போதும் இது போன்ற உளவியல் விளைவுகளைக் காண முடியும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பயம் தனிமனித உறவுகளுக்கு இடையிலும் வரும். சமூக உறவிலும் வரும். சமூகங்களுக்கு இடையிலான உறவிலும் வரும். நாடுகளுக்கு இடையிலான உறவிலும் வரும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை 2009க்குப் பின்னரான தமிழ்க் கூட்டு உளவியலின் ஒரு பகுதியாக இந்தப் பயம் காணப்படுகிறது. சமூக வலைத்தளங்களில் மற்றவர்களைக் கடித்துக் குதறுபவர்கள், வெறுப்பர்கள், ஊடகவியலாளர்கள்.. என்று சமூகத்தின் எல்லாப் பிரிவினர் மத்தியிலும் இந்தப் பயம் காணப்படுகிறது.

2009க்குப்பின் ஈழத்தமிழர் கூட்டு உளவியல் எனப்படுவது கொந்தளிப்பானதாக, தன் தோல்விகளுக்கு வேறு யார் மீதாவது பழியைப் போட முயற்சிக்கும் ஒன்றாக மாறிவிட்டது. அது எதிரி யார் நண்பர் யார் என்று நிதானமிழந்து தனக்குள் தானே அடிபட்டுக் கொண்டிருக்கிறது. அதன் விளைவு தான் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த தேர்தல் முடிவுகள் ஆகும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி ஆகிய தமிழரசுக் கட்சி அதைப் பிரதிபலிக்கிறது. மாவை சேனாதிராஜாவும் அந்த சீரழிவுக்குப் பொறுப்பு. சம்பந்தர் கட்சியை திசை மாற்றிய பொழுது மாவையும் அதற்குச் சாட்சியாக இருந்தார். அதன் விளைவாக கட்சி அவருடைய கட்டுப்பாட்டில் இருந்து வழுகிச் சென்றது. மாவை சேனாதிராஜாவிடமிருந்து சிறீதரன் கற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால் தமிழரசுக் கட்சி ஒரு கட்சியாகத் தூர்ந்து கொண்டு போகிறது. அதற்குள் இரண்டு அணிகள் பலமாக எழுந்து வருகின்றன. இதில் ஒரு தெளிவான, தீர்க்கமான முடிவை எடுக்க சிறீதரன் தயங்குவாராக இருந்தால் மாவைக்கு நடந்ததுதான் எதிர்காலத்தில் அவருக்கும் நடக்கலாம்.

சம்பந்தர், மாவை ஆகிய இருவருடைய கடைசிக் காலங்களில் இருந்து மற்றவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இருவருமே தோல்வியுற்ற தலைவர்களாகத்தான் இறந்திருக்கிறார்கள். தமிழ்க் கட்சிகளின் மூத்த தலைவர்கள் தோல்வியுற்ற தலைவர்களாக இறப்பது என்பது ஒரு விதத்தில் தமிழ் அரசியலின் தோல்வியுந்தானே? மாவையின் உடலை சுவிகரித்து கட்சியின் ஒரு பகுதியினரை சுடலைக்கு வர வேண்டாம் என்று தடுக்கும் அரசியலை விடவும் மாவையின் தோல்விகளில் இருந்து கற்றுக்கொண்டு, கட்சிக்குள் உறுதியான கட்டிறுக்கமான ஒரு தலைமையைக் கட்டியெழுப்புவது தான் இப்பொழுது சிறீதரன் அணி செய்ய வேண்டிய வேலை. தலைமைத்துவம் எனப்படுவது வாய்ப்புகளுக்காக நசிந்து நசிந்து காத்திருப்பது அல்ல. வாய்ப்புகளை உருவாக்குவது. அல்லது கிடைக்கும் வாய்ப்புகளை வெற்றிகரமாகப் பயன்படுத்துவது. கடந்த சுதந்திர தினத்திலன்று கிளிநொச்சியில் சிறீதரனும் கஜேந்திரக்குமாரும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை அவ்வாறு கிடைக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தும் அரசியல்தான்.






# மாவையின் மரண "வீடு"ம் மஹிந்தவின் "அரச வீடு"ம்

**"வடக்கு, கிழக்கில் தமிழரசின் "வீட்டுக்குள்" நடக்கும் தலைவர் பதவிக்கான குத்து வெட்டுக்களினால் தமிழ் தேசிய அரசியல் பலவீனமடைந்து சந்தி சிரிக்கும் நிலையில் அதனைப் பார்த்து எள்ளி நகையாடிக் கொண்டிருந்த தென்னிலங்கை தற்போது முன்னாள் ஜனாதிபதிகளின் "அரச வீடு" தொடர்பாக அநுர - மஹிந்த கையில் எடுத்துள்ள அரசியலினால் ஆத்திரப்பட, ஆரவாரப்பட, அசிங்கப்படத் தொடங்கியுள்ளது."**

------------------------------------------------------------ - கே. பாலா ----

அண்மைக் காலமாக வடக்கு, கிழக்கு தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சின்னமான வீடு, வீட்டுக்குள் நடக்கும் தலைமைத்துவத்திற்கான சண்டைகள், சதிகள் பெரும் பரப்பரப்பையும். பதற்றத்தையும் பரிதவிப்பையும் பரிகாசத்தையும் ஏற்படுத்தி வரும் நிலையில் தற்போது தென்னிலங்கையிலும் "வீடு" பெரும் அரசியல் பிரளயங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளதுடன் தென்பகுதி அரசியல் பரப்பையும் "வீடு" கொதி நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

தமிழ் தேசிய அரசியல் பரப்பில் தமிழர்களின் தாய்கட்சியான "வீடு" சின்னம் கொண்ட இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் தலைவர் பதவிக்கு ஏற்பட்ட சண்டைகள், சதிகள் அதன் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டிலும் எதிரொலித்து "துரோகிகள்" என பட்டம் சூட்டப்பட்ட தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் மாவை சேனாதிராஜாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தக்கூட வரமுடியாத நிலையும் இன்னும் சிலர் இரகசியமாக திடீரென வந்து அஞ்சலி செலுத்திவிட்டு ஓடிமறைந்த நிலையும் நாடு முழுவதுமிருந்து இன, மத, மொழி வேறுபாடுகளின்றி அரசியல் தலைவர்கள், கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியையிலும் இறுதி ஊர்வலத்திலும் பங்கேற்றிருந்த போதிலும் இந்த "துரோகிகள்" பட்டம் சூட்டப்பட்டவர்கள் மாவை சேனாதிராஜாவின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்க முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி மாவை சேனாதிராஜாவின் மரண வீட்டு வாசலிலும் இறுதிக்கிரியை நடைபெற்ற மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்திலும் வைக்கப்பட்டிருந்த "கட்சிக்காக தன்னை அர்ப்பணித்த மாவை சேனாதிராஜா ஐயாவை இறுதி சந்தர்ப்பத்தில் அவமானப்படுத்தி அதில் இன்பம்கண்ட கயவர்கள் யாரும் அஞ்சலி செலுத்துவதற்கு வரவேண்டாம் இது 18 பெருக்குமான எச்சரிக்கை" எனக்கூறி தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன், செயலாளர் சத்தியலிங்கம், பதில்தலைவர் சிவஞானம், மத்தியகுழு உறுப்பினர்களான சாணக்கியன், குலநாயகம், இரத்தினவடிவேல், செழியன், துரைராஜசிங்கம், கலையரசன், கமலேஸ்வரன், ரஞ்சினி, ரவிகரன் சயந்தன், செயோன் சாந்தி. மட்டக்கப்பு சரவணபவன், பரம்சோதி. செல்வராசா ஆகியோரின் படங்கள் பொறித்த பாரிய பதாகை தமிழரசின் தலைமைப்பதவி பிரச்சினையால் "வீடு" பிளவுபட்டுள்ளதை பகிரங்கமாக வெளிச்சம் போட்டுக்காட்டியது.

இவ்வாறு தகுதியற்ற தமிழ் தேசியப்பற்றற்ற அரசின் முகவராக செயற்படுபவர் என தமிழ் தேசிய உணர்வாளர்களினால் குற்றம் சாடடபடும் ஒருவரின் தமிழரசுக்கட்சி தலைவர் பதவி மோகத்தினால் "வீடு" இரண்டுபட்டுப் போயுள்ளதுடன் இவ் வீட்டு பிரச்சினைகளே தமிழ் தேசிய அரசியலை இன்று ஆக்கிரமித்து பேசு பொருளாகியுள்ளதுடன் தமிழ் தேசிய அரசியலையும் மலினப்படுத்தியுள்ளது.

இவ்வாறு "வீடு" தமிழ் தேசிய அரசியலை சந்தி சிரிக்கும் நிலைக்கு கொண்டுவந்து விட்டுள்ள நிலையில் இந்த வீட்டைப்பார்த்து எள்ளிநகையாடிக்கொண்டிருந்த தென்னிலங்கை தற்போது அங்கும் ஏற்பட்டுள்ள "வீடு" தொடர்பான அரசியலினால் ஆத்திரப்பட, ஆரவாரப்பட, அசிங்கப்படத் தொடங்கியுள்ளது. தமிழரசுக் கட்சியின் வீட்டிற்குள் இரு அணிகள் குத்துவெட்டுக்களில் ஈடுபடுவதைப்போன்றே தென்னிலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த - இந்நாள் ஜனாதிபதி அநுர அணிகள் "வீடு" தொடர்பான சண்டையைத் தொடங்கியுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரையில் ஜனாதிபதிகள், பிரதமர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்கள் அதிகம். இந்த சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்கள் முன்னா ஜனாதிபதிகள், பிரதமர்களுக்கும் அன்று முதல் இன்றுவரை ஆட்சியிலுள்ள அரசுகளினால் வழங்கப்பட்டே வருகின்றன. முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமருக்கு வழங்கப்படும் இந்த சிறப்புரிமைகள், வரப் பிரசாதங்களுக்காக வருடமொன்றுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபா செலவிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில்தான் "மாற்றம்" என்ற கோஷத்துடன் ஆட்சியைகைப்பற்றிய அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு செலவுகுறைப்பு என்ற பெயரில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்களில் கை வைத்துள்ளது. மக்களின் வரிப்பணத்தை வீண் செலவுகளிலிருந்து பாதுகாக்கவே இந்த நடவடிக்கை என அநுரகுமார அரசு காரணம் கற்பிக்கும் நிலையில் இது மஹிந்த ராஜபக்சவை இலக்குவைத்து அநுர அரசு நடத்தும் அரசியல் பழிவாங்கல் என ராஜபக்ச தரப்பினரும் அவர்களது கட்சியினரும் குற்றம் சுமத்துகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகள் அரச மாளிகைகளிலிருந்து வெளியேற வேண்டும் என அநுர குமார அரசு விடுத்துள்ள அறிவிப்புக்கு நாட்டு மக்களிடையிலும் அரசியல்வாதிகளிடையிலும் ஆதரவும் எதிர்ப்பும் காணப்படுகின்றன. நாட்டுக்கு சேவை செய்த முன்னாள் ஜனாதிபதிகளுக்கான கௌரவத்தை அரசு தொடர்ந்தும் வழங்க வேண்டுமென ஒருதரப்பினரும் மக்களின் வரிப்பணத்தை இவர்களின் ஆடம்பரங்களுக்கு செலவிடக்கூடாதென இன்னொரு தரப்பினரும் வாதிட்டு வருகின்றனர்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதிகளை அரச மாளிகைகளிலிருந்து அநுரகுமார அரசு நினைத்தவாறு வெளியேற்ற முடியாது. அதில் சட்ட சிக்கல்கள் உள்ளன. முன்னாள் ஜனாதிபதிகள் தாம் விரும்பினால் மட்டுமே அரசமாளிகைகளிருந்து வெளியேறலாம் எனவும் சட்ட நிபுணர்கள், அரசியல் ஆய்வாளர்கள் வெளிப்படுத்துகின்றனர். இதனால் தான் அரச மாளிகையிலிருந்து வெளியேறுங்கள் என அநுரகுமார அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் வேண்டுகோள் மட்டுமே விடுத்துள்ளதுடன் அவர்களாக வெளியேறும் வகையில் முன்னாள் ஜனாதிபதிகளை குறிப்பாக மஹிந்த ராஜபக்சவை கடுமையாக விமர்சனம் செய்யும் பிரசார தந்திரத்தையும் முன்னெடுத்து வருகின்றது.

ஆனால் அநுரகுமார அரசின் இந்த பிரசாரங்களுக்கு, சேறுபூசும் வேலைகளுக்கு "நான் மஹிந்த ராஜபக்ச" என ஒற்றை வரியில் பதிலளித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளதுடன் குறிப்பிட்ட வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என அநுரகுமார அரசு எனக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தால் அந்தவீட்டிலிருந்து அடுத்த நிமிடமே வெளியேறத் தயார் எனவும் அறிவித்துள்ளார். ஏனெனில் அவ்வாறு அநுரகுமார அரசினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்க அரசியலமைப்பில் இடமில்லை என்பது மஹிந்த ராஜபக்சவுக்கு தெரியும்.

அதனால்தான் தனது வீட்டிலிருந்து தன்னை வெளியேற்ற அநுர அரசு சதி என்ற குற்றச் சாட்டை முன்வைத்து மஹிந்த ராஜபக்ச ஒருபுறம் தனது அனுதாப அரசியலை முன்னெடுக்க, மக்களின் வரிப்பணத்தில் அரச வீட்டில் சுகம் அனுபவிக்க மஹிந்த ராஜபக்சவை அனுமதிக்க முடியாதென மறுபக்கம் அநுர அணியும் மக்களைத் திருப்திப்படுத்த "வீடு" தொடர்பான அரசியலைக் கையில் எடுத்துள்ளதால் தென்னிலங்கை அரசியலும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கில் "வீட்டுக்குள்" (தமிழரசுக்கட்சி) நடக்கும் பிரச்சினைகளினால் தமிழ் தேசிய அரசியல் பலவீனமடைந்து சந்தி சிரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதுபோல் தென்பகுதியிலும் "வீடு" தொடர்பான அரசியலினால் முன்னாள் அரசியல் தலைவர்கள் அவமானப்படுத்தப்படும் அரசியலிலிருந்து அவர்கள் அகற்றப்படும், அவர்களின் கட்சிகள் பலவீனமாக்கப்படும் பிரசார யுக்திகள் அநுரகுமார அரசினால் திட்டமிட்டு முன்னெடுப்படுவதாகவே தோன்றுகின்றது. எது எப்படியோ வடக்கு, கிழக்கிலும் தெற்கிலும் இப்போது "வீடே" பிரச்சினைக்குரியதாகவுள்ளது.

## அம்மா (நிலைமண்டில ஆசிரியப்பா)

------------------------------

அம்மா என்றால் அன்பெனும் அர்த்தமாம்
சும்மா சொல்வாரா சொர்க்கம் அவளென
பத்து மாதம் பாரம் தாங்கியே!
சொத்தென என்னைச் சொந்தமாய்க் கொண்டாய்
எறும்புஈ நெருங்கிடா இரவெலாம் காத்தே
பொறுப்புடன் பொழுதெலாம் பத்தியம் இருந்தாய்
உதிரமே பாலாய் உணவாய் ஊட்டியே
மதியுடன் வாழ மழலையிற் பொழிந்தாய்
தடுக்கிலே ஊர்ந்தும் தவழ்ந்தும் செல்கையில்
இடுக்கண் வராமல் இமைபோற் காத்தாய்
பல்லு முளைக்கப் பரவசம் கொண்டே!
பல்லுக் கொழுக்கட்டை பதமாய்ச் செய்தாய்
எட்டு அடியை எட்டியே வைக்கையில்
கட்டியோர் முத்தம் கனிவாய்த் தந்தாய்
ஐந்து வயதில் அணைத்துச் சென்றுமே!
புந்தி புகட்டப் பள்ளியில் சேர்த்தாய்
வாலிப வயதில் வாழ்க்கைத் துணைக்கு
தாலியைத் தரிக்கவைத்து தம்பணி முடித்தாய்
பிள்ளை எனக்கு பிறந்த போதிலே!
கொள்ளை இன்பம் கொண்டு களித்தாய்
சோதனை பலவும் சோதித்த போதுமே!
சாதனை பலவற்றை சாதிக்கச் சொன்னாய்
விண்ணை நோக்கி விரைந்த போதுமே!
மண்ணில் மறவேன் மரிக்கும் வரைக்குமே!

------------------------------

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அர்ச்சுனா எம்பியின் கருத்திற்கு வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் முரளிதரன் கடும் எதிர்ப்பு!



ஜனாதிபதி அண்மையில் யாழில் பங்கேற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் வெளிப்படுத்திய கருத்திற்கு வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தனது இல்லத்தில் வைத்து 04-02-2025 ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கண்டனம் வெளியிட்டார். அங்கு அவர் தெரிவிக்கையில்,

தையிட்டியில் காணப்படும் விகாரையை இடிக்க முடியாதென கூறும் அர்ச்சுனா இராமநாதன் பெரிய விளானில் இருப்பதாக கூறும் தனது பத்து ஏக்கர் காணியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பாரா?

வடக்கு, கிழக்கில் நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் காணியற்று காணப்படுகிறார்கள். அவர்களுக்கு அர்ச்சுனாவால் காணியை கொடுக்க முடியுமா?

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் மண்டைதீவில் கடற்படை சுவீகரித்துள்ள காணியை மக்களுக்கு முடிந்தால் பெற்றுக் கொடுக்கட்டும். காணி தொடர்பான முழுமையான காணி விபரங்கள் அர்ச்சுனா உட்பட்ட எந்தவித பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கிடையாது. இவர்கள் காணி தொடர்பில் எப்படி சரியான விடயங்களை கொண்டு செல்ல முடியும்?

வடமராட்சி கிழக்கில் கோரியடியில் இருந்து சுண்டிக்குளம் வரை மக்களின் காணிகள் தேசிய பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பூங்காவில் மக்கள் இருக்க முடியாது. ஆனால் மக்கள் வசிக்கின்றார்கள். காலப்போக்கில் அவர்களை காணியை விட்டு அகற்றுவார்கள். இது தொடர்பான விடயங்களை அர்ச்சுனா முதலில் தேடி அறிந்து பேச வேண்டும்.

மக்களின் காணி பிரச்சனைகள் எங்கெல்லாம் காணப்படுகின்றது என்பதனை அர்ச்சுனா எங்களிடம் கேட்டால் கூட்டிச் சென்று காட்டுவோம். மக்களின் காணி என்று தெரிந்தும் அதை அபகரித்து விகாரைகளை கட்டினார்கள், முகாம்களை அமைத்தார்கள்.

மக்களின் காணியை அபகரித்து என்ன கட்டினாலும் அதை இடிக்கத்தான் வேண்டும். அதை தவறென கூறும் அர்ச்சுனா எம்பி முதலில் காணி தொடர்பான முழுமையான ஆவணங்களை தேடி அறிந்து கொண்டு பேச வேண்டுமெனவும் மேலும் அவர் தெரிவித்தார்.

# வட்டுக்கோட்டையில் தனியாக வசித்து வந்த வயோதிபப் பெண்ணிடம் நூதன முறையில் பணம் கொள்ளை!



06-02-2025 அன்றையதினம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி பகுதியில் தனியாக வசித்து வரும் வயோதிபப் பெண் ஒருவரின் 50 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் குறித்த வீட்டுக்கு சென்று, தான் கமநலசேவை திணைக்களத்தில் இருந்து வருவதாகவும், விவசாய அழிவுக்கு நட்ட ஈடாக குறித்த பெண்ணுக்கு 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த பணத்தை பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் உண்மையறியாத அந்த வயோதிபப் பெண் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார். தான் ஏமாற்றப்பட்ட விடயம் பின்னர் தெரியவந்த நிலையில் இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தையிட்டிக் காணியை கையளிக்க மறுத்துள்ள அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம்

## யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்குக் கடிதம்



- ந.லோகதயாளன்

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரைக் காணி உட்பட 14 ஏக்கர் காணி முழுவதும் திஸ்ஸ விகாரைக்கே சொந்தமானது. அதனை ஒருபோதும் எவருக்கும் கையளிக்க முடியாது. அதற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் அனுமதி இல்லை என்று அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கு எழுத்தில் அறிவித்துள்ளது.

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தால் டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலருக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்திலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் விகாரையின் நிலத்தைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் விகாரைக்குப் பொறுப்பான தேரர் மற்றும் விகாரையின் நிர்வாக சபையினருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. திஸ்ஸ விகாரை நிலத்தின் எந்தவொரு பகுதியும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணக்கப்பாட்டுக்கு அமைவாக பொதுமக்களுக்கு வழங்குவதற்குச் சந்தர்ப்பம் இல்லை.

விகாரை அமைக்கப்பட்டுள்ள 7 ஏக்கர் 3 றூட் 9.97 பேர்ச் உட்பட 14 ஏக்கர் 5097 பேர்ச் காணி, விகாரைக்கே சொந்தமானது. அந்தக் காணியை விகாரையிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக விகாரைக்குச் சொந்தமான நிலத்தின் எந்தவொரு பகுதியையும் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லை.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவை. அரசியலமைப்பின் 9ஆவது பிரிவின்படி பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதாலும், பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளதாலும் காணியை விகாரைக்குக் கையளிக்க எந்தத் தடையும் இல்லை.

விகாரைக்குரிய காணியில் பௌத்த சமயத்தின் முன்னேற்றத்துக்காக சைத்யம், புத்த மெதுரா, போதி, ஆவாச மனை, அன்னதான மடம் மற்றும் மடாலயம் ஆகியவற்றைக் கொண்ட பூங்கா தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் புனித யாத்திரை செல்லும் பௌத்த பத்தர்களுக்காக ஓய்வு மண்டப வசதிகள், அன்னதான மண்டபம், தியான மண்டபங்கள், தர்ம பாடசாலை கட்டடங்கள் என்பன நிர்மாணிக்கப்படுவதும் அவசியம். நில அளவைத் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள 14 ஏக்கர் 5097 பேர்ச் காணியை மீள விகாரையிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என கடிதத்தில் உள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்றபோது யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தையிட்டியில் பொதுமக்களின் காணிகளில் எவ்வித அனுமதியும் பெறாது அமைக்கப்பட்டிருக்கும் விகாரை தொடர்பாகப் பிரஸ்தாபித்தார். யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம் என்பற்றை மீறி எந்தவித அனுமதியும் பெறாது பொதுமக்களின் காணிகளில் அமைக்கப்பட்டிருக்கும் விகாரை தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்திருந்த வடக்கு மாகாண ஆளுநர், விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது என்றும், மாற்றுக்காணிகளைப் பெற்றுக்கொள்ள காணிகளின் உரிமையாளர்கள் உடன்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்திருந்தார். காணிகளின் உரிமையாளர்கள் மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொள்ள உடன்படவில்லை என்று அந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியிருந்தார். ஆயினும் இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தக் கடிதம் தொடர்பாக எந்தக் கருத்தையும் மாவட்ட அரச அதிபரோ, ஆளுநராலோ முன்வைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் அமைக்க திட்டமிட்டுள்ள காற்றாலை மின்சக்தி திட்டம் தொடர்பான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு கலந்துரையாடல்!



கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராஞ்சி (வேரவில்) பகுதியில் 204 மெகாவாட் காற்றாலை மின் திட்டம் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 100 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் தொடர்பான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் 6ம் திகதி வியாழன் அன்றையதினம் நடைபெற்றது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் T.M.J.W. Bandara தலைமையில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர்களான Mr. P. Dilakshan, Mr. Chatura Wanniaracchi, மாவட்ட அரசாங்கதிபர் எஸ்.முரளிதரன், பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் இராணுவ அதிகாரிகள், விமானப்படை அதிகாரி, உதவிப்பணிப்பாளர்கள், த ි ை ண க ් க ள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# மீண்டும் தேர்வு செய்யுங்கள்
# விஜய் தணிகாசலம்
ஸ்காபரோ றூஜ் பார்க் PC வேட்பாளர்

RE-ELECT
FEB 27
2025





ONTARIO PC
விஜயின் அணியில் இணைந்து ஆதரிக்க அழையுங்கள்

vijaythani.ca | info@vijaythani.ca | 416-354-6320 | 221 Morrish Rd

Authorized by the CFO for the Vijay Thanigasalam Campaign



## OCCUPATIONAL DISABILITY RESPONSE TRAINING
PREVENTION LINK

காயமடைந்த, நோய்வாய்ப்பட்ட மற்றும் ஊனமுற்ற தொழிலாளர்கள் பணியிடத்தில் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வது அனைவரின் பொறுப்பாகும். அதற்குத் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், முதலாளிகள் (தொழில் வழங்குவோர்) மற்றும் எமது சமூகம் ஆகியவற்றிலிருந்து கல்வி, விழிப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை தேவைப்படுகிறன.

*Prevention Link* யின் உயர்தர மற்றும் ஆற்றல்மிக்க பயிற்சி, அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களால் உருவாக்கப்பட்டது. அவர்கள் எங்கள் நிரலாக்கத்திற்கு தங்களின் அர்ப்பணிப்பு, பன்முகத்தன்மை மற்றும் நடைமுறை அறிவைக் கொண்டு வருகிறார்கள். பங்கேற்பாளர்கள் தங்கள் பணியிடங்கள் மற்றும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்களுக்குப் பயனளிப்பதற்குத் தேவையான திறன்கள், தன்னம்பிக்கை மற்றும் சமூகக் கட்டமைப்பைப் பெறுகின்றனர்.

Sign up today at preventionlink.ca

OR

உங்கள் உறுப்பினர்கள், பணியாளர்கள் அல்லது பணியிடங்களுக்கு மட்டுமே நாங்கள் பயிற்சி அளிக்க முடியும்! உங்கள் வசதிக்கேற்ப திட்டமிட எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

## WINTER/SPRING 2025

**Level One: Rights and Obligations**
» February 24 – February 25 (In-person)

**Level Two: Benefits and Services**
» February 19 – March 5 (Virtual)
» March 3 – March 4 (In-person)

**Level Three: Appeals & Dispute Resolution**
» May 4 – May 9 (In-person)

**Level Four: Return to Work**
» March 23 – March 28 (In-person)

Scan the QR code to register for a course.

Watch for registration deadlines and early bird discounts!

Contact us at info@preventionlink.ca



## உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



## Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



**Coverall Group Inc.**
Contact: Siva 416-706-8160

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்: 16 - 08 - 1931



இறைவன் அடியில்: 29 - 01 - 2025

# திருமதி. அன்னபூரணம் அரசரத்தினம்

(கொக்குவில் கிழக்கு)

**யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் அரசரத்தினம் அவர்கள் 29-01-2025 புதன்கிழமை அன்று கொக்குவிலில் காலமானார்.**

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி, நாகம்மா தம்பதிகளின் மூத்த மகளும்,
காலஞ்சென்ற அரசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும்,
காலஞ்சென்ற நாகராசா, தர்மலிங்கம், கமலம், ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான திருஞானம், தேவசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,
ஜெயதேவி, மதியானந்ததேவி, மணிவர்னன் (ஜேர்மனி), சிறிதேவி (லண்டன்), காலஞ்சென்ற கமலக்கண்ணன், திருமுருகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,
செல்வேந்திரம், நடனசபா, சீதாதேவி, விபுலானந்தன் ஆகியோரின் மாமியாரும்,
ஹரன் (கனடா), சர்வாங்கனி (லண்டன்), கோபி (லண்டன்), நந்தினி, நளினி (கனடா), திலீபன் (கனடா), மயூரன் (கனடா), உசானி (பிரான்ஸ்), சாளினி, சுகிர்தன், மைத்ரேயி (லண்டன்), மாதுமை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,
நிலானி (ஜேர்மனி), சகனியா (ஜேர்மனி), சீமான் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும்,
சாகித்யா (லண்டன்), ராகவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் *02-02-2025* ஞாயிற்றுக்கிழமையன்று முற்பகல் *10.00* மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

**திருமுருகன்** (Canada): (647) 274-3945
**மதி** (Sri Lanka): +94 77 787 9702
**மணிவண்ணன்** (Germany): +49 177 2783234
**சிறீதேவி** (UK): +44 7748 765242

# மரண அறிவித்தல்



தோற்றம்:
20-03-1974

மறைவு:
03-02-2025

## கோகுலன் (கோபி) சண்முகம்

யாழ்ப்பாணம். கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும்
கனடா, ரொறன்ரோவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த
கோகுலன் (கோபி) சண்முகம் அவர்கள் 03-02-2025 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசேகரம் சண்முகம், பேரின்பவல்லி அவர்களின் ஏக புத்திரனும்,
சிவகுருநாதன், சரோஜினிதேவி அவர்களின் அன்பு மருமகனும்,
சங்கீதா (துளசி) அவர்களின் அன்புக் கணவரும்,
கணபதிப்பிள்ளை, தையல்நாயகி அவர்களின் அன்புப் பேரனும்,
காலம் சென்றவர்களான விநாயகமூர்த்தி, சரஸ்வதிதேவி அவர்களின் பெறாமகனும்,
ஸ்ரீபதிதாசன், சிவா கணபதிப்பிள்ளை, ஜெகதீஸ்வரி அவர்களின் அன்பு மருகனும்,
சுபஜோதி, இந்திரஜோதி, பத்மஜோதி, மங்களஜோதி, சுபாசினி (New Zealand), நிமலநடேசன்,
நடனஜோதி, காலஞ்சென்ற பாஸ்கரலிங்கம் அவர்களின் உடன் பிறவா சகோதரனும்,
சத்யகுமார், பிரியா, ரதி (California), நளாயினி (Colombo), கனகசபை (Australia), சண்முகம்
(சின்னா), போட்டி (Australia), இந்திரா, அன்சலா (Singapore) அவர்களின் அன்பு மைத்துனரும்,

**அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை 10-02-2025, செவ்வாய்க்கிழமை 11-02-2025 இரு
நாட்களும் பி.ப 5:00 மணி முதல் பி.ப 9:00 மணி வரையும்,
புதன்கிழமை 12-02-2025 மு.ப 8:00 மணி முதல் மு.ப 9:00 மணி வரை
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1ல்
பார்வைக்கு வைக்கப்பட்டு பின் மு.ப 9:00 மணி முதல் மு.ப
11:00 வரை கிரியைகள் நடைபெற்று மு.ப 11:30 மணிக்கு
Highland Hills Crematorium
12492 Woodbine Avenue, Gormley, ON L0H 1G0ல் தகனம் செய்யப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு: சுரேஷ் 416-624-5044, பிரபா 416-357-5327, சிவா 416-887-7052**

# பாடசாலைகளை சரி செய்யவும், குழந்தைகளுக்கு உணவளிக்கவும், ஊழியர்களை பணியில் அமர்த்தவும், ஒவ்வொரு மாணவருக்கும் ஆதரவளிக்கவும்

ஒன்ராறியோ என்.டி.பி தலைவர் மாரிட் ஸ்டைல்ஸ், பாடசாலைகளில் முதலீடு செய்து எங்கள் குழந்தைகளின் வெற்றியை உறுதி செய்வார். மாணவர்களுக்கு அதிக வாய்ப்புகளைப் பெறுவதற்கும், சிறந்த தொழில்களைப் பெறுவதற்கும், வணிகங்களை ஆரம்பிக்கவும், நெகிழ்திறன் கொண்ட, அதிக வரி கட்டணமில்லாத ஒன்ராறியோவுக்கு பங்களிப்பதற்கு வலுவான பாடசாலைகள் உதவும்.

"ஒன்ராறியோவின் பாடசாலைகள் வாய்ப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, அவை சமூகங்களை உருவாக்குகின்றன, அவை நம்மை ஒருவருக்கொருவர் இணைக்கின்றன" என ஸ்டைல்ஸ் கூறினார். "ஒன்ராறியோவின் பல தலைமுறையினர் தமது எதிர்காலத்தையும் சமூகத்தையும் எமது உலகத்தரம் வாய்ந்த அரச நிதியுதவி பெறும் பாடசாலைகள் ஊடாக கண்டடைந்துள்ளனர்". ஆனால் டக் ஃபோர்ட் தலைமையிலான அரசின் ஏழு நீண்ட ஆண்டுகள், சேவை குறைப்புகள், நெரிசலான வகுப்பறைகள், செயலிழந்து வரும் பாடசாலைகள், எங்கள் குழந்தைகளுக்கு குறைந்த ஆதரவு ஆகியவற்றைக் கொடுத்துள்ளன.

பாடசாலைகளை சரிசெய்யவும், ஊழியர்களை வேலைக்கு அமர்த்தவும், குழந்தைகளுக்கு உணவளிக்கவும், ஒவ்வொரு மாணவரும் வெற்றிபெறத் தேவையான உதவிகளைக் கொண்டிருப்பதை உறுதி செய்யவும் ஒரு திட்டத்தை ஒன்ராறியோவின் புதிய ஜனநாயகவாதிகள் கொண்டுள்ளனர்.

## மாரிட்டின் திட்டம்:

### 1. எமது பாடசாலைகளை சரி செய்தல்

ஒன்ராறியோவின் பாடசாலைகள் லிபரல்களால் விட்டுச் செல்லப்பட்ட பாரிய பழுதுபார்ப்பு பின்னடைவுகளால் சுமையாக உள்ளன, இந்த நிலை ஃபோர்டின் கன்சர்வேடிவ் கட்சியின் கீழ் மேலும் கீழ்நோக்கி செல்கிறது. குளிர்காலத்தில் வெப்பம் இல்லாத காரணத்தால் உறைய வைக்கும் வகுப்பறைகள், ஒழுகும் கூரைகளுடன் கூடிய உள்ளக விளையாட்டு மைதானங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள். மாணவர்களுக்கு உயர் தரமான, வளர்க்கும் கற்றல் சூழலை வழங்கக்கூடிய வகையில் பாடசாலைகளை சரிசெய்வோம். பாடசாலைகளின் பராமரிப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் அதே வேளையில், 10 ஆண்டுகளுக்குள் பழுதுபார்ப்பு பின்னடைவை தீர்க்கும் வகையில் ஆண்டுக்கு மேலதிகமாக $830 மில்லியன் முதலீடு செய்வோம்.

### 2. அதிக ஊழியர்களை பணியமர்த்தல்

டக் ஃபோர்ட் தலைமையின் கீழ், வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன, இதனால் மாணவர்களுக்கு குறைந்த நேரடி ஆதரவு கிடைக்கிறது. மாணவர்களுக்குத் தேவையான ஒருவருக்கொருவர் கவனத்தை வழங்கக்கூடிய அதிக ஆசிரியர்கள், கல்வி உதவியாளர்கள், குழந்தை மற்றும் இளைஞர் உதவியாளர்கள், ஆரம்பகால குழந்தை பருவ கல்வியாளர்கள், பாதுகாவலர்கள் மற்றும் வர்த்தக ஊழியர்களை நாங்கள் பணியமர்த்துவோம். பாடசாலைகளில் அதிக அக்கறையுள்ள பெரியவர்கள் இருப்பது அனைவருக்கும் பாதுகாப்பானதாகும்.

### 3. மாணவர்களுக்கு உணவளித்தல்

பசியோடு இருக்கும் குழந்தைகள் கற்றுக்கொள்ள முடியாது. குடும்பங்கள் முன் எப்போதும் இல்லாத அதிகரித்த மளிகை பொருட்களின் விலைகளை எதிர்கொள்கின்றன, மேலும் வரி கட்டணங்களிலிருந்து வரும் பணவீக்கம் செலவுகளை இன்னும் அதிகரிக்கக்கூடும். ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் வெற்றி பெறுவதற்கு ஏதுவாக மாகாணரீதியான பாடசாலை உணவுத் திட்டம் ஒன்றை நாம் உருவாக்குவோம். ஒன்ராறியோ ஏற்கனவே பாடசாலைகளில் சில குழந்தைகளுக்கு உணவளிக்கிறது, நாங்கள் அதை அனைவருக்கும் விரிவுபடுத்துவோம், அதைச் செய்ய ஒன்ராறியோவில் தயாரிக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட புதிய உணவைப் பயன்படுத்துவோம். குழந்தைகள் தங்கள் பசி குறித்து கவலை கொள்ளமல் ஆசிரியரின் மீது கவனம் செலுத்த உதவுவோம், இதனால், குடும்பங்களுக்கு சில நிதி நிவாரணங்களை வழங்குவோம்.




**மாற்றத்திற்கான நேரம்! இந்தத் தேர்தலில் மாரிட் ஸ்டைல்ஸ் தலைமையிலான ஒன்ராறியோ என்.டி.பி. கட்சிக்கு வாக்களியுங்கள்.** தமிழ் சமூகத்திற்கும் ஏனையவர்களுக்கும் சிறந்த வாழ்க்கையை உருவாக்க நாங்கள் உதவுகிறோம்:

**பொதுக் கல்வியில் மறு முதலீடு செய்தல்**
கல்விக்கான நிதியை அதிகரிப்பதன் மூலம் உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக நாங்கள் முதலீடு செய்வோம்.

**போக்குவரத்தை சரி செய்தல்**
நீங்கள் உங்கள் குடும்பத்தினரிடமும் அன்புக்குரியவர்களிடமும் விரைவாக வீட்டிற்குச் சென்றடையும் வகையில் நாங்கள் போக்குவரத்தை மேம்படுத்துவோம்.

**வீட்டு பராமரிப்புக்கு அதிக முதலீடு, பொதுத்துறை ஊழியர்களுக்கு அதிக ஊதியம்**
தமக்குத் தேவையான ஆதரவை பெறும் போது மக்கள் செழித்து வளர்கின்றனர் என்பதை நாங்கள் அறிவோம். எங்கள் திட்டம் உங்கள் பெற்றோர் தங்கள் சொந்த வீட்டில் வசதியாகவும், அன்புக்குரியவர்களுக்கு நெருக்கமாகவும் தொடர்ந்து வாழ உதவும்.

**பணவீக்கத்தை எதிர்த்தல்**
நாங்கள் வாகன காப்பீடு கட்டணங்களை குறைப்போம், நெடுஞ்சாலை 407 இல் இருந்து சுங்க கட்டணங்களை அகற்றுவோம், பணவீக்கத்தை எதிர்கொள்வோம்.

**பிப்ரவரி 27 அன்று உங்கள் பக்கம் இருக்கும் ஒரு என்.டி.பி. அரசாங்கத்திற்கு வாக்களியுங்கள்!**



Thadsha Navaneethan
Scarborough North



Doly Begum
Scarborough Southwest



Sonali Chakraborti
Scarborough Centre



Christian Keay
Scarborough–Guildwood



Hibah Sidat
Scarborough–Rouge Park

AUTHORIZED BY THE CFO FOR THE ONTARIO NDP

ONTARIO NDP NPD

# கிளிநொச்சியில் இடம் பெற்ற சுதந்திரதின எதிர்ப்பு போராட்டம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்




கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 4ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

77வது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளில் சங்கத்தினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி கிளிநொச்சிச்சி பழைய கச்சேரி வரை முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சுதந்திர தின அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில், இலங்கையின் சுதந்திர தினமான பிப்ரவரி நாலாம் தேதி தமிழ் தேசத்தின் கரி நாள் என நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம். இத்தீவின் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை இத்தீவின் பௌத்த சிங்கள தேசத்திடம் தாரைவார்த்த நாளே கரி நாளாகும்.



1948ம் ஆண்டு முதல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட நாளிலிருந்து தமிழர்கள் தமது வாழ்வாதாரங்களை ஒவ்வொரு துறையிலும் இழக்கத் தொடங்கினர்.

1956 இல் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள சட்டமூலம் நமது மொழி. பண்பாட்டுப் படுகொலையின் தொடக்கமாகும்.

1958ம் ஆண்டும் அதன் பின்னரும் நடைபெற்ற திட்டமிடப்பட்ட இனக் கலவரமும், இனப்படுகொலையும்.

1970லும் அதன் பின்பும் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக தரப்படுத்தலின் ஊடாக தமிழர்கள் பல்கலைக்கழக கல்வி பெறுவது தடுக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியரசு யாப்பின் மூலம் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1981ம் ஆண்டு இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜேஆர் ஜெயவர்த்தன தலைமையிலான சிங்கள அரசின் அமைச்சர்களான காமினி திசாநாயக்க ஸ்ரீல் மத்தியூ முதலியோர் தலைமையிலான குழுவினரும் அவர்களுடன் ராணுவமும் பொலீசும் முன்னின்று யாழ்ப்பாண பொது நூலகத்தை எரித்தமை இன்னொரு இன அழிப்பின் உச்சத்தை காட்டியது.

இலங்கையை ஆண்டு வந்த பல்வேறு சிங்கள அதிபர்களால் தொடர்ந்து பல்வேறுபட்ட வழிகளில் திட்டமிட்டு நடாத்தப்படுகின்ற இனப்படுகொலைகளில் நாகர்கோவில் விமான குண்டு தாக்குதல், நவாலி சென் பீட்டர் தேவாலய தாக்குதல், நூற்றுக்கணக்கான செம்மணி புதைகுழிகள் போன்ற இனப்படுகொலைகள், இனப்படுகொலைகளின் சாட்சி பகிரும். தொடர்ச்சியான.

அதேபோல் கடந்த சில தசாப்தங்களாக சிங்கள இராணுவத்தால் தொடர்ந்து நடாத்தப்பட்ட கொலை, கற்பழிப்பு, சித்திரவதை, வலிந்து காணாமல் ஆக்கப்படுத்தல் ஆகியவும் ஓர் சாதாரண நாளாந்த நிகழ்வுகளாயின.

இப்படியே இன்னும் பட்டியல் நீண்டு சென்று 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலம் வரை நிகழ்ந்தது. இன்று வரை எந்த நீதியும் இன்றி உள்நாட்டு.

பொறிமுறையால் திட்டமிடப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி கிடைக்காமல் நாம் சர்வதேச நீதி பொறிமுறையை வேண்டி போராடிக் கொண்டிருக்கிறோம்.

இக் கரி நாளில் பின்வரும் விடயங்களை நாம் வலியுறுத்துகிறோம்.




1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும்.
2. தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.
3. பௌத்த மயமாக்கல் உடனே நிறுத்தப்பட வேண்டும்.
4. தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்து வரும் நில அபகரிப்பு உடனே நிறுத்தப்பட வேண்டும்.
5. தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
6. தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து ராணுவம் வெளியேற்றப்பட வேண்டும். உடனடியாக
7. தமிழின படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்.
8. சிவில் செயல்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.
9. ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.
10 எமது நிலம் எமக்கு வேண்டும்.
11. தாயகம், தேசியம், அரசியல் சுயநிரணயம் என்பன எமது உரிமைகள். அவற்றை உடனே அங்கீகரிக்க வேண்டும்.
12. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.
13. சர்வதேசம் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும்.
14. எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொது வாக்கெடுப்பு நடத்துமாறு சர்வதேசத்தை கோருகிறோம்.

இப்போது பொறுப்பேற்று இருக்கின்ற அரசு கிளீன் ஸ்ரீலங்கா என கூறிக்கொண்டு எமது நிரந்தர அரசியல் தீர்வை தருவதில் எந்த அக்கறையும் காட்டாது இருந்து கொண்டு அடுத்தடுத்து வருகின்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசை மேலும் மேலும் பலப்படுத்துவதில் இலக்காக இருப்பதுடன் எமது நிரந்தர அரசியல் தீர்வை தராது இருந்து கொண்டு ஒற்றை ஆட்சியை பலப்படுத்துவதிலேயே கிளினாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே இவர்களிடம் இருந்து எந்த நீதியும் நிரந்தர அரசியல் தீர்வும் கிடைக்காது. சர்வதேசமே தலையிட்டு மேற்குறிப்பிட்ட 14 விடயங்களையும் நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என இக் கரி நாளில் பிரகடனப்படுத்துகிறோம் என குறிப்பிடப்பட்டது.

கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவித்தனர்.



# Sri Lanka's Human Rights Body Recommends Government Ratify UN Refugee Convention

**- Siva Parameswaran**

Sri Lanka's Human Rights Commission (HRCSL) has recommended the government to ratify the UN Refugee Convention of 1951.

This recommendation comes in the backdrop of over a hundred Rohingya refugees from Myanmar rescued by Tamil fishermen being detained at an Air Force Camp in Mullaitivu, whose fate remains unclear. There are 116 refugees including an infant at the camp now.

Sri Lanka not being a signatory to the International Refugee Convention has become an issue in deciding the future of these Rohingya refugees.

Now HRCSL has recommended the government to ratify the same and emphasized the principle of non-refoulement, which is guaranteed to all persons under section 18(1) of the International Convention for the Protection of All Persons from Enforced Disappearance Act, No. 5 of 2018.

"The Government of Sri Lanka should ratify the 1951 Convention on Refugees, the 1954 Convention Relating to the Status of Stateless Persons, and the 1961 Convention on the Reduction of Statelessness, and work towards guaranteeing the rights of refugees and stateless persons within Sri Lanka's domestic legal system".

The HRCSL noted that credible reports including the report of the UN Independent International Fact - Finding Mission on Myanmar refers to the risks faced by Rohingya with respect to being subject to enforced disappearance.

"In this context, the HRCSL observed that the Sri Lankan government is bound by domestic law to meaningfully consider this risk of enforced disappearance when taking any decision with respect to returning Rohingya persons to Myanmar".

Apart from strongly recommending the country ratify the convention, the HRCSL has said the Department of Government Information should take steps to facilitate the access of journalists to the Rohingya asylum seekers so that the Sri Lankan public can be kept informed about their status.

Other recommendations include calling upon all concerned to respect the rights of human rights defenders (HRD).

"All state institutions, including law enforcement authorities, should respect the rights of HRDs to express themselves and organize and participate in peaceful assemblies for the purpose of protesting any government policy, including any decision to repatriate Rohingya asylum seekers. State institutions should refrain from threatening, intimidating, or harassing HRDs who organize and participate in such peaceful assemblies".

HRCSL has recommended the Department of Immigration and Emigration and Sri Lanka Air Force should appoint a focal point to accept aid, including clothing, sanitary items, and certain food items, particularly for children, and enable such aid to reach the asylum seekers without delay.

Since the Rohingya refugees are detained at the SLAF camp in Mullaitivu their recommendation to the Immigration Department and the SLAF to provide regular and meaningful access to state officials with specialisations in child protection and welfare to ensure that the best interests of the children among the asylum seekers are appropriately safeguarded.

In their further recommendation, they have emphasized the Immigration Department and the Air Force provide access to relevant specialised United Nations entities including UNHCR to ensure that the asylum seekers can be appropriately vetted and, depending on the outcome of the process, formally registered as asylum seekers.

The safety and security of female asylum seekers have come in for special attention by the HRCSL which has made a recommendation to the officials to ensure their safety.

"The Department of Immigration and Emigration and Sri Lanka Police should take immediate measures to ensure that female asylum seekers at the Mullaitivu Air Force Camp are provided security at all times by trained women police officers, and the Department of Immigration and Emigration and the Sri Lanka Air Force should ensure that adequate sanitary facilities are provided to the female asylum seekers".

However, the refugees before being lodged at the Mullaitivu camp, they turned back on their way to Mirihana at Habarana. The Trincomalee Magistrate who visited the refugees ordered them to be shifted to the detention centre in Mirihana.

But they were stopped at Habarana and sent to Mullaitivu by the SSP of Trincomalee. While the HRCSL notes that sending them to the SLAF camp was 'unexpected', it has not made it clear in its report as to how a Magistrate's order was changed by the Senior Superintendent of Police.

A further recommendation by the HRCSL says that Immigration should take measures to transfer the asylum seekers to a facility that is fit for the purpose of housing men, women and children with specific welfare needs.

Yet another recommendation by the nation's top human rights body stresses that any detention of the Rohingyas should be 'strictly temporary' and only to the extent necessary for a considered decision to be taken with respect to the status of an asylum seeker.

"Therefore, where an asylum seeker is duly registered by UNHCR, they should be released from custody".

# Demands for a Referendum and Right to Self-Determination Echo as Tamils Mark National Day as Black Day

**- Siva Parameswaran**

Massive protests were held in the North and East of Sri Lanka by the Tamils calling the Sri Lankan independence day a 'Black Day' for the Tamils.

Protest rallies were held in Jaffna, Killinochi, and Batticaloa among other places with hundreds of Tamils participating including Tamil MPs Sivagnanam Shritharan from the Ilankai Tamil Arasu Katchi, Gajendrakumar Ponnambalam leader of the Tamil National People's Front and the Selvarasa Kajendran the TNPF's General Secretary.

Slogans like "Sri Lanka Independence Day is Black Day for Eelam Tamils and the Tamil nation, where are the ones who were handed over by many families, international inquiry is needed, international community reply to us, North and East are traditional Tamil homeland" were raised by the protestors.

The rally in Jaffna commenced in front of the famous Nallur Kanthasamy Temple, where women and children, young and old, youth and students participated holding black flags and black headbands.

A huge banner declaring "Sri Lanka's independence is Black Day for Tamil homeland, we want an international investigation into the Tamil genocide" in white and red letters on a black background was carried by the protestors in the front.

The Sri Lankan lion on three legs and carrying a sword in the other in yellow with blood dripping from the sword and splashing across the lion's throat could also be seen in the banner.

The protesting Tamils also carried banners demanding "Tamil people's right to external right to self-determination" and condemning the government for trying to cover up their actions by paying compensation.

Members of the Association for Relatives of the Enforced Disappearances (AERD) in the North East Provinces, a civil society group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict also participated in the protest, carrying placards and banners rejecting any internal investigation by the Office on Missing Persons (OMP).

"We reject all political solutions under a unitary state constitution" and "OMP is an eye wash and we demand an international inquiry" the banners and placards read.

Pictures from the Jaffna University the hotbed of Tamil politics black flags flying from the gate along the main entrance leading to the main buildings.

At one place, the national flag was brought down and a black flag was hoisted on the campus, although this could not be independently verified.

Students along with civil society activists lined up in front of Jaffna University and raised slogans against "Sri Lanka's Independence Day".

They also raised slogans denouncing the Anura Kumara Dissanayaka-led National People's Power government condemning their stand.

"Before the elections-we will release the political prisons; after the elections-no political prisoners".

The protesting students also demanded the military be removed from the Tamil homeland.

"Get out military, occupation on one side and eviction from the other side" and "Kurunthoormalai our property, Mylathamadu-Mathavanai our property, Thayiddy our property", vedukkunari our property".

In Batticaloa, the protest rally commenced in front of the Sengaladi Pillayar Kovil and ended at the Kommonthurai Pillayar Kovil. Earlier the Batticaloa Magistrate's Court issued a ban order against 8 people including all three Tamil MP's - Shanakiyan Rajaputhiran Rasamanickam, Gnanamuthu Srineshan, Elayathamby Srinath all elected on behalf of the ITAK from the district, and Amalanayaki Amalan, President Batticaloa district ARED against staging any protest in and around the Gandhi Park.

Protestors in the East demanded the grazing lands at Mylathamadu - Mathavanai be handed over to the Tamil farmers, part of which is forcefully occupied by Sinhala farmers facilitated during the earlier regimes.

After the rally ended in front of the temple, Tamil broke coconuts calling upon the Anura government and praying for a permanent political solution based on federalism. The prayer was led by former Tamil National Alliance MP and the common Tamil candidate in the last presidential election Packiyaselvam Ariyanethiran.

As part of the protest, a 14-point demand by the Tamils was also read out which included international justice for the enforced disappearances release of all the political prisoners, stopping of the Buddistisation of Tamil areas, ending land grabs and plundering resources in Tamil homeland.

Apart from demanding the removing the military from the Tamil homeland they also demanded an international inquiry into Tamil genocide and putting an end to intimidating civil society activists and journalists.

They also called for the recognition of the Tamil Nationhood, sovereignty, and right to self-determination as their rights. Protestors also wanted the North and East as traditional Tamil homeland, recognizing the Vaddukoddai resolution and referendum in the Tamil homeland as per international norms to decide their future.




# இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட விலங்குகள் மற்றும் மருந்துகளுடன் மூவர் மன்னாரில் கைது

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்






- எஸ்.ஆர். லெம்பேட் (05-02-2025)

சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து படகு மூலம் தலைமன்னார் பகுதிக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி பறவைகள், விலங்குகள் மற்றும் மருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மன்னார், பேசாலை பகுதியில் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில், சட்ட விரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட புறாக்கள் (PIGIONS), ஆப்பிரிக்க காதல் பறவைகள் (AFRICAN LOVE BIRDS), பறக்கும் அணில்கள் (FLYING SQUIRRELS) மற்றும் மருந்து தொகைகளுடன் பயணித்த லொறி ஒன்றுடன், மூன்று (03) சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதன்படி, தலைமன்னார் கடற்படைக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், மன்னார் பிரதேச பொலிஸ் குற்றப்பிரிவு இணைந்து மேற்கொண்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, மன்னார் பேசாலை பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் வீதியில் பயணித்த லொறி ஒன்று சோதனையிடப்பட்டன.

இதன் போது குறித்த லொறியில் 220 புறாக்கள், 20 ஆபிரிக்க காதல் பறவைகள், 08 பறக்கும் அணில்கள் மற்றும் 30 மருந்து மாத்திரைகள், மருந்து திரவங்கள் அடங்கிய 40 போத்தல்கள், லொறி மற்றும் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கூட்டு நடவடிக்கையின் மூலம், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தம்புள்ளை மற்றும் கொழும்பில் வசிக்கும் 25 மற்றும் 44 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட விலங்குகள், லொறி மற்றும் சந்தேக நபர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.






CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
## சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: **SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH**
**5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2**

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. **ஏப்பிரல் 27, 2025**ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..............................

குடும்பப் பெயர்: ..............................

பிரிவு: ..............................

பிறந்த திகதி: ..............................

தொலைபேசி எண், email: ..............................

..............................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com


மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1132

## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

*" வாக்குண்டாம் நல்ல மனமண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
துப்பாமல் சார்வார் தமக்கு "*

பிள்ளையாரின் மகிமைகளைத் திரட்டித் தருவது பெருங்கதையாகிய பிள்ளையார் காப்பாகும். காப்பு - காத்தல் இரண்டும் ஒன்றே. காப்பு என்பது இடர் அணுகாது தடுப்பது. மனிதனை நோய், நொடி அணுகாது காப்பதற்காகக் கையில் கட்டப்பெற்றகாப்பே, காரண இடுகுறி பெற்று, காப்பு எனப்பட்டது. தன்னை நாடிவரும் அன்பர்களுக்குக் காப்பு அளிப்பதே விநாயகனின் பணியாக இருப்பதால், விநாயகனின் கதை பெருங்கதையாக விளங்குகின்றது. இக்காரணத்தினால் காப்பும், பெருங்கதையும் பிள்ளையார்க்குரியன என்பது புலனாகின்றது. பிள்ளையார் காப்பைப் பெருங்கதை என அழைத்துவருவது குறிப்பிடத்தக்கது.

கந்தப்புராணம், இலிங்கபுராணம், உபதேசகாண்டம் முதலியவற்றிலே கூறப்படும் பிள்ளையாரின் மகிமைகளைத் திரட்டித் தருவது பெருங்கதையாகிய பிள்ளையார் காப்பாகும். இப்பெருங்கதையைப் படித்து மருதடியான் கடாட்சம்பெற வர்த்தலைவிளான் மக்கள் விரும்பினர். 1919 ஆம் ஆண்டு கார்த்திகையில் கார்த்திகை கழிந்த பின்னாளில் பெருங்கதையைப் படிக்க ஆரம்பித்தனர். இக்காலத்தில் அன்பர்கள் இருபத்தொரு இழைகளை இன்பமுறக்கட்டி, இருபத்தியொருநாள் ஒருபொழுது உணவுண்டு, ஒரு மனமாகி அவ்விரதத்தை அனுட்டிக்க ஆரம்பித்தனர்.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஆன்மாக்கள் நன்னிலை பெற்று பேரின்பம் பெற, மூலாதீதரான பிரணவர் விரும்பினார். ஆன்மகோடிகள் பாசப்பிணிப்பிலிருந்து விடுபட்டு, பக்குவம் பெற வேண்டும். ஆதிபகவானாகிய அவர் சர்வபிரபஞ்சங்களையும், பிரகிருதிகளையும் தோற்றுவித்து, அதில் ஆன்மாக்களைப் பிறக்க வைத்தார். ஜெனித்த உயிர்களுக்கு மலநாசம் ஏற்பட இறையருள் அடிப்படையாக விளங்குகின்றது. அத்தன்மை கைகூட ஏற்புடைய இடமாகக் கோவில்கள் காணப்படுகின்றன. இவ்வாறான கோவில்களிலே இறையருள் பரவிக்கிடக்கின்றது. இதனைப் பெற வழிபாட்டு முறைகள் பெரிதும் உதவுகின்றன.

வருத்தலைவிளானிலுள்ள மருதடிப்பிள்ளையார் கோவில்கொண்டுள்ள பதி, பலவகையிலும் சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது. தன்னை நாடிவரும் அடியவர் துயர்தீர்த்து அருள்புரியும் பிரணவராக, இவ்வாலயத்திலே விநாயகர் எழுந்தருளியுள்ளார். இவரது பெருமையை அறிந்த வர்த்தலைவிளான் மக்களும், அயலூரவர்களும் பிள்ளையாரை நாடிவரத் தொடங்கினர். விநாயகவிரதங்களை பக்திபூர்வமாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். இவ்வாறான நிலையிலே, விநாயவருக்குகந்த பிள்ளையார் காப்பாகிய பெருங்கதையை மக்கள் பக்திபூர்வமாகப் படித்தும் இவ்விரதத்தை ஒருமனமாகிக் கடைப்பிடித்தும் பல்வேறு நன்மைகளைப் பெற்றனர்.

தம்மைக் காத்தற்பொருட்டு பிள்ளையார் காப்புப் படிக்கும் கேட்கும் பக்தர்களை, பிள்ளையார் அருள்புரிந்துகாப்பாற்றுவார் என்ற எண்ணம் மக்கள் தனதிலே நிறைந்து காணப்பட்டது. பக்தர்களது மனமறிந்து இடர்களைப்போக்கும் விநாயகனின் அருளுக்குச் சான்றாக, ஒரு சம்பவத்தை இவ்வூரவர் கூறி மகிழ்வர். இம்மை, மறுமை ஆகிய இருமையையும் நல்கும் விநாயகனிடம், இவ்வூரிலே வாழ்ந்த வல்லிபுரம் தம்பதிகள் ஆராத பக்திகொண்டவர்களாக விளங்கினர். இத்தம்பதிகளுக்கு ஆறு பெண் குழந்தைகள் இருந்தபோதிலும், குலம்காக்க ஆண்குழந்தை இல்லையே என்ற குறை இவர்களிடம் காணப்பட்டது.

மருதடியானிடம் தமது குறையை முறையிட்டுத் தினமும் மருதைச் சுற்றி வலம்வந்து வணங்கித் தொழுதனர். நோன்புகளைக் கடைப்பிடித்து, தேவையானோருக்குத் தொண்டுகள் புரிந்தனர். தர்மம் செய்தனர். சன்னிதியின் ஈசான மூலையில் ஓர் அரச மரத்தை நாட்டினர். மருதடிப்பெருமானின் அனுக்கிரகத்தால் வல்லிபுரம் தம்பதிகளுக்கு அழகான ஆண்மகவு கிடைத்தது. ஆண்மகவு வேண்டித் தாம் வைத்த நேர்த்திகளை நிறைவேற்றியதோடு, தொடர்ந்தும் தொண்டு செய்யும் பெருமனதுடையவர்களாக வாழ்ந்தனர்.

இவ்வாறான நிலையில் இவர்கள் நட்ட அரசமரத்துடன் இணைந்து வேப்பமரக்கன்று ஒன்றும் இணைந்து வளரத்தொடங்கியது. விநாயகன் அருளால் கிடைத்த ஆண்மகவு திருமணம் செய்த காலமாகிய 1946 ஆண் ஆண்டிலேயே இந்த வேப்பமரம் முளைத்து, அம்மையும் அப்பனும் சிவபார்வதி சமேதராக இணைந்துள்ள அர்த்தநாரீஸ்வர தத்துவத்தை உணர்த்துவது போலக் காணப்பட்டது. இவ்வாறான பல அனுபவங்கள், மருதடி விநாயகன் அருளால் தமக்கும் ஏற்பட்டதாக பக்திகொண்ட அன்பர்கள் கூறி மகிழ்கின்றனர். வாழ்க்கை என்பது நம்பிக்கையின் அடித்தளத்திலேயே காணப்படுகின்றது. நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு என்பதற்கமைய ஒவ்வொருவருடைய ஆழ்ந்த நம்பிக்கையும், அவரவரின் வாழ்க்கையின் ஆணிவேராக நின்று மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

இவ்வாறே வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் வர்த்தலைவிளான் மருதடி விநாயகரின் திருவருளைப் பூரணமாக உணர்ந்தவராக விளங்கியுள்ளார். மருதடி கணேசரும், மகாவித்தவான் கணேசையரும் வேற்றறக்கலந்து காணப்பட்டனர் என்பதை அவரது "வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் இருபா இருப..்து" என்ற நூலிலுள்ள பாடல் வரிகளான,

*" என்குலத் தந்தணர் நின்னடித் தொண்டினை
வழிவழி செய்து வாழும் புன்னைமர
நகரின் மேவிய நற்றளியிற் போல்
வீயா மருதடி மேவு மூலத்தும்
உற்றே யருள் செய்யும் உயர் பரம்பொருளே "*

*என்ற பாடல் வரிகள் தெளிவாக்கியுள்ளது.*

***வளரும்...***

கனடா தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களின் ஒருங்கமைப்பில்
தமிழ்த்தேசியத்தின் மூத்த போராளி
அமரர் மாவை சேனாதிராசா அவர்களின்
நினைவஞ்சலிக் கூட்டம் - 09-02-2025



கடந்த அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ்மக்கள் இன - மொழி - மண் விடுதலைக்காக ஆட்சியுரிமைக்காகத் தன் உயிரையும் துச்சமென மதித்து எத்தியாகத்திற்கும் தன்னை அர்பணித்து அடக்குமுறையாளர்களின் பல்வேறு சிறைவாசம், சித்திரைவதை கொடுமைகளை அனுபவித்து விடுதலை வேட்கையும் தமிரசுதாகத்துடனும் இறுதி வரை கொள்கைப்பற்றுடன் தமிழ் தேசியத்தின் வழிநின்று வாழ்ந்து மடிந்திட்ட சிறைமீண்ட செம்மலுக்கு - தமிழினத்தின் மூத்த போராளிக்கு - அஞ்சலி செலுத்த அணி அணியாகத் திரண்டு வாரீர் என அழைக்கின்றோம்.

இடம்: Easttown Banquet Hall,
2648 Eglinton Ave E, Scarborough, ON M1K 2S3

நேரம்: 3 மணிக்கு

தொடர்புகளுக்கு :

திரு. சச்சிதானந்தன் +1(647)202-3234
திரு. வீரசுப்புரமணியம்.
(416) 282-0947
திரு. துரைராஜா
+1 (647) 829-4044
திரு. சோதி
(647) 409-8966
திரு. அகிலன்

தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் - கனடா

தடைகளை வெல்லும் தமிழ்த்தேசியம்

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# இவ்வார ராசிபலன்

**07-02-2025 வெள்ளி தொடக்கம் 13-02-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** பெத்தவங்களோட ஆசி கிடைக்கும் வாரம். வீடு தேடி வெற்றி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன் பொருள் சேரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். வருமானம் திருப்தி தரும். புதிய நட்பு உருவாகும். பழையக்கடன் தீரும். குதூகலம் சேரும். எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். முயற்சிகள் பலன் தரும். காரிய வெற்றி கிட்டும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெகுமதி கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். ஆனந்தம் பெருகும். செயலில் துணிவு கூடும். குடும்ப உறவு பலப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 6,8,1,2
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,H




**ரிஷபம்:** அருளும், பொருளும் சேரும் வாரம். வெகுமதி பெருகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் முடிவுகள் உண்டு. அரசியலில் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். நினைத்த செயலை சாதித்துக் காட்டுவீர்கள். பொதுவிஷயங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கடன் சுமையில் இருந்து விடுபடுவீர்கள். நண்பர்கள் உங்களை தேடி வருவார்கள். வாய்ப்புக்கள் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு உயரும். பழைய கடன் அடையும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறை நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,4,2,5
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**மிதுனம்:** பாசமும், நேசமும் பெருகும் வாரம். மனக்குழப்பங்கள் தீரும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். எதிர்ப்புகள் குறையும். ஆதாயம் பெருகும். உடல்நலம் சிறக்கும். தேக பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். நீண்ட நாளைய நோய் விலகும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். திருமண பேச்சு கைகூடி வரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு ஏற்படும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழில் முயற்சி வெற்றி தரும். குடும்பத்தில் அமைதி உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பங்குசந்தையில் லாபம் தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கடன்சுமை குறையும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,5
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,P




**கடகம்:** வளமும், ஜெயமும் கிடைக்கும் வாரம். பிரார்த்தனை பலன் கொடுக்கும். கல்வியில் மேன்மை உண்டு. உடல் பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடந்தேறும். மனதில் மகிழ்ச்சி கூடும். நட்பு வட்டம் விரிவடையும். வங்கி சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. எதிலும் கவனமாக செயல்பட வேண்டும். அலைச்சல் அதிகரிக்கும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேலை வாய்ப்புக் கூடும். குடும்ப பிரச்சனைகள் தீரும். அற்புத வாய்ப்பு கிட்டும். உடல்வலியிலிருந்து விடுதலை அடைவீர்கள். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளிடத்தில் அன்பு அதிகரிக்கும். பொன்னான நேரம் உங்களை வந்து அடையும். நினைத்த காரியங்களில் வெற்றி நிகழும். இனிதான செய்திகள் கூடி வரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். நாவடக்கம் தேவை. மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். பங்குத்தொழில் பணம் தரும். முற்போக்கு சிந்தனை வரும். சேமிப்பு அதிகமாகும். சீரான வாழ்வு அமையும். தாய்வழி உறவில் கவனம் தேவை. கலைத்தொழிலில் கவனம் தேவை. உணவுத்தொழில் உயர்வு தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** நிதாதனமான லாபம் கிடைக்கும் வாரம். உன்னதமான காலம். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். நன்மைகள் பெருகி வரும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். எதிர்மறையான எண்ணங்கள் விலகும். மனஅமைதி உண்டாகும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மனக்கசப்பு வந்து நீங்கும். சில வாய்ப்புகள் தேடி வரும். தொழிலில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. துன்பங்கள் அகலும். தீய எண்ணம் விலகும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பலன் தரும். பங்குச்சந்தை கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். மனநிம்மதி கூடும். மருத்துவச் செலவு குறையும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். காதல் கண்ணியம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,4
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J




**கன்னி:** மரபை மீறி பேசிய உறவு பாராட்டும் வாரம். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணத்தால் பணவரவு உண்டு. பிள்ளைகள் எண்ணம் பூர்த்தியாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். வார்த்தைகளில் கவனம் தேவை. வாய்ப்புகள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். பருப்பு தானம் பாவம் போக்கும். நிம்மதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் தரும். செய்தொழில் சிறக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். கொடுக்கல், வாங்கல் சுமூக நிலை ஏற்படும். திருமண பாக்கியம் கைகூடி வரும். புதிய முயற்சியை தள்ளிப் போடுங்கள். தெம்பும், தைரியமும் கூடும். தாராளமான வருமானம் உண்டு. பொதுப்பிரச்சனைகள் விலகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஹய்கரிவர், அதிர்ஷ்ட எண்: 3,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,N




**துலாம்:** நியாயமான ஆசைகள் நிறைவேறும் வாரம். கையிருப்பு கரையும். வெகுமதி கூடும். தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். தங்க நகைகள் சேரும். கடன் தொல்லை நீங்கும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். புதிய முயற்சிகள் பலன் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். புகழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். ஞாபக திறன் கூடும். சுபகாரியம் கைகூடும். குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். தொழில்முயற்சி வெற்றி தரும். பணவரவு உண்டு. காரியங்களில் வெற்றி காண்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,W




**விருச்சிகம்:** செல்வமும், புகழும் கிடைக்கும் வாரம். பழையக் கடன் வசூலாகும். உறவினர் வருகை உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. அன்னதானம் ஆரோக்கியம் தரும். குதூகலமான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வழிபாடு மாற்றம் தரும். நண்பர்களால் மதிப்பு உயரும். பணியில் இடமாற்றம் தேவை. வாழ்க்கை தரம் உயரும். பேச்சில் கவனம் தேவை. வரவுகள் திருப்தி தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். உதவிகள் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 6,4,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J

(தொடர்ச்சி 22 பக்கம்)

Hindu Parliament & Sanatana Hindu Sangha Presents

# KUMBH MELA
## NORTH AMERICA 2025



MAHASHIVARATRI SNAN
TUESDAY, FEB 25th
KAILASA TORONTO
1960 Ellesmere Rd Unit 10, Scarborough, ON

GRAND AMRIT SNAN
SUNDAY FEB 2nd
KAILASA USA
9720 Central Ave, Montclair, CA

Other Snan Dates
Jan 28th Feb 11th

Learn More:
Organized with Hindu Temples across North America
Email: contact@nithyananda.ca
Call: (416) 439-2089



# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் தைப்பூச திருநாள் சிறப்பாக நடைபெறவுள்ளது



06-02-2025 வியாழக்கிழமை தொடக்கம் 7ம் 8ம் திகதி மாலை 6:00 மணிக்கு இருமுடி மாலை அணியும் சக்திகள் மாலை அணிந்து ஐந்து நாட்கள் பூசைகள் நடைபெறும்.

9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையும், 10-02-2025 திங்கட்கிழமை காலை தைப்பூசத்துடன் முடிவடையும். காலை 8:00 மணி தொடக்கம் சிறப்பு பூசைகள் நடைபெற்று, மகேஸ்வர பூசையும் நடைபெறும். 11-02-2025 செவ்வாய்கிழமை காலை பருவ பூசை சிறப்பாக நடைபெறும்.

அன்னையின் அருள் வேண்டி சிறப்புடன் வாழ அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அத்துடன் நீங்கள் விரும்பிய வேப்பிலை, பழம், பூ என்பன கொடுத்துதவலாம்.

செடி வளர முதலில் விதை வேண்டும், அந்த விதையை ஊன்ற மனம் வேண்டும். அந்த விதையை ஆழமாக ஊன்ற வேண்டும். அது நன்கு வளரவதற்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். எந்த அளவிற்கு ஆழமான ஈடபாடு இருக்கின்றதோ, அந்த அளவிற்குத் தக்கபடி பயன் கிடைக்கும்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647

## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். தொல்லைகள் ஒழியும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். பணவரவு பெருகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். நிம்மதியான காலம். விரயங்கள் கூடும். மருத்துவச் செலவுகள் குறையும். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். இல்லத்தில் அமைதி கெடும். ஆண்களின் அதிகாரம் உயரும். சாதகமான வாய்ப்பு அமையும். வாகன மாற்றம் ஏற்படும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,7,1,5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,X




**மகரம்:** பெத்தவங்களால் பெருமை சேரும் வாரம். சோம்பல் அதிகரிக்கும். வருமானம் திருப்தி தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். முதலீடுகளில் கவனம் தேவை. சந்தோஷம் குடிகொள்ளும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றியைத் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். மதிப்புகள் கூடும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். அனுகூலச் செய்தியால் மனம் மகிழும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகள் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பங்குத்தொழில் லாபம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிட்டும். எடுத்த முயற்சி வெற்றி தரும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். ஆன்மீகத்தில் ஆர்வம் கொள்வீர்கள். காதல் கை கூடும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,2,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** மற்றவர்களால் மரியாதை கிடைக்கும் வாரம். ஆனந்தம் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். பொது இடங்களில் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். உடல்சோர்வு ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். மனநிம்மதி தரும். அலைச்சல் அதிகரிக்கும். புது முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பெண்களுக்கு பெருமை சேரும் விதமாக அமையும். பயணங்களால் பலன் பெறுவீர்கள். பொறாமைகள் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,G




**மீனம்:** நேர்த்தியும், கீர்த்தியும் கிடைக்கும் வாரம். தான தர்மங்கள் பலன் தரும். மனக்கசப்பு வந்து நீங்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. கணவன், மனைவி உறவு மேம்படும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். உடல்நலம் மேம்படும். வாகனச்செலவு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். வீண் குழப்பங்கள் வந்து போகும். காதல் பிரிவை ஏற்படுத்தும். கோதுமை தானம் தாய்நலம் சேர்க்கும். கஷ்டங்கள் மாறும். வீண் வம்பு அகலும். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சுக்கள் ஏற்படும். திறமைகள் வெளிப்படும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மனநெருக்கடிகள் தீரும். நல்லோர்களின் சந்திப்புக் கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வீண் செலவுகளை தவிர்க்கவும். புதிய வாகனங்கள் வாங்க நேரிடும். பெண்களுக்கு பெருமையான நாளாக அமையும். பிரார்த்தனையால் பயன் பெறுவீர்கள். அலைச்சல் பசி தகவல் ஆதாயம் தரும். புதுமுயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கடன் சுமைகள் தீரும். உதவிகள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வர், அதிர்ஷ்ட எண்: 7,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இரத்த தான முகாம் – கொடையாளர்களிடம் வேண்டுகோள்!

யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் இரத்த வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதிக் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (04.02.2025) காலை 09 மணிமுதல் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் திரு. சீ. இந்திரகுமார் தலைமையில் இந்த இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. உதிரம் கொடுத்து உயிர் காக்கும் பணிக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குருதிக்கொடையாளர், நலன்விரும்பிகளின் ஆதரவினை எதிர்பார்த்து நிற்கின்றனர் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள்.

# யாழ்ப்பாணத்தில் இந்திய மீனவர்களில் ஒருவருக்கு 6 மாத சிறைத் தண்டனையுடன் 40 இலட்சம் அபராதம்!

## 7 பேர் நிபந்தனையுடனும் இருவர் முழுமையாகவும் விடுதலை!

கடந்த 8 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் 1 படகுடன் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள்10 பேரினது வழக்கு 3ம் திகதி அன்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 3ம் திகதி அன்றையதினம் வரை இவர்களை விளக்கமறையில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. 3ம் திகதி அன்றையதினம் சிறைச்சாலை அதிகாரிகளால் 10 மீனவர்களும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கினை ஆராய்ந்த நீதவான் 10 பேரில் இருவர் சிறுவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்ய உத்தரவிட்டார். அத்துடன் ஏனைய 8 பேருக்கும் ஆறு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறை தண்டனை வழங்கி நிபந்தனுயுடன் விடுதலை செய்தார்.

இந்த எட்டு பேரில் ஒருவர் படகோட்டி என்பதால் அவருக்கு ஆறுமாத கடூழிய சிறைத்தண்டனை வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. அத்துடன் படகோட்டிக்கு நான்கு மில்லியன் ரூபா அபராத தொகையும் விதிக்கப்பட்டது. இதனை செலுத்த தவறின் மேலும் 3 மாத சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் நளினி சுவாஸ்கரன் உத்தரவிட்டிருந்தார்.

கடந்த மாதம் பத்தாம் திகதி நெடுந்தீவு கடலில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை ஒரு படவுடன் கடற் படையினர் இவர்களை கைது செய்திருந்தனர்.

# யாழ் மாவட்டத்தில் அரச நிறுவனங்களில் 162 வெற்றிடங்கள் உள்ளதாக அரச அதிபர் பிரதீபன் தெரிவிப்பு!




யாழ் .மாவட்ட செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய அரச நிறுவனத்தில் 162 ஆளணி வெற்றிடங்கள் காணப்படுவதாக யார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஜனாதிபதி அனுரா குமார திசாநாயக்காவிடம் தெரிவித்தார்.

கடந்த 31ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கலந்துரையாடலை ஜனாதிபதி அனுரகுமாரா திசாநாயக்கா தலைமை தாங்கிய நிலையில் மாவட்டத்திலுள்ள ஆளணி பற்றாக்குறை தொடர்பில் இவ்வாறு ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணம் மாவட்டம் செயலகம் உற்பட அதன் கீழ் இயங்கும் 15 பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினருக்கு குறைவாக பின்வரும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டி உள்ளது.

ஹஹ நிர்வாக கிராம உத்தியோகத்தர் 06, கிராம உத்தியோத்தர்கள் 65, முகாமைத்துவ உதவியாளர்கள் 27, அலுவலக உதவியாளர்கள் 45, சாரதிகள் 12 மற்றும் மாவட்ட பதிவாளர் தின களத்தில் 08 பேர் உள்ளடங்களாக 162 ஆளணியினர் தேவைப்பாடு இருப்பதாக கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி அனுரா விரைவில் முப்பதாயிரம் பேரை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான திட்டம் நடைமுறைப்படுத்த உள்ளதாக தெரிவித்தார்.

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · CONSTRUCTION · COMMERCIAL · VACANT LAND · INDUSTRIAL



## OUR SERVICE

**RESIDENTIAL, COMMERCIAL**

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CONTACT US

# NESAN
## Subramaniam



**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record

PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000


416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1505 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 7, 2025

# மாவையின் மரண "வீடு"ம் மஹிந்தவின் "மன்னர் வீடு"ம்




"வடக்கு, கிழக்கில் தமிழரசின் ""வீட்டுக்குள்" நடக்கும் தலைவர் பதவிக்கான குத்து வெட்டுக்களினால் தமிழ் தேசிய அரசியல் பலவீனமடைந்து சந்தி சிரிக்கும் நிலையில் அதனைப் பார்த்து எள்ளி நகையாடிக் கொண்டிருந்த தென்னிலங்கை தற்போது முன்னாள் ஜனாதிபதிகளின் "அரச வீடு" தொடர்பாக அநுர -மஹிந்த கையில் எடுத்துள்ள அரசியலினால் ஆத்திரப்பட,ஆரவாரப்பட, அசிங்கப்படத் தொடங்கியுள்ளது". - கே.பாலா -

அண்மைக் காலமாக வடக்கு,கிழக்கு தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சின்னமான வீடு, வீட்டுக்குள் நடக்கும் தலைமைத்துவத்திற்கான சண்டைகள் , சதிகள் பெரும் பரப்பரப்பையும்.பதற்றத்தையும் பரிதவிப்பையும் பரிகாசத்தையும் ஏற்படுத்தி வரும் நிலையில் தற்போது தென்னிலங்கையிலும் ""வீடு ""பெரும் அரசியல் பிரளயங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளதுடன் தென்பகுதி அரசியல் பரப்பையும் ""வீடு" கொதி நிலைக்கு கொண்டு வந்துள்ளது. (தொடர்ச்சி 9ம் பக்கம்)



# Chinese Lunar New Year 2025 celebrations, hosted by MPP Aris Babikian in Scarborough on 02-02-2025

ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதியின் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் நடத்திய **Chinese Lunar New Year** 2025 விழாவில் சிறப்பு விருந்தினராக ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் கலந்து சிறப்பித்தார். கடந்த 02-02-2025 அன்று நடைபெற்ற இந்த அழகிய விழாவில் பல்லினங்கள் சார்ந்த பொதுமக்களும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள ஒன்றாரியோ மாகாணத்திற்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்களில் தமிழ் பேசும் வேட்பாளர்களான விஜேய் தணிகாசலம் மற்றும் யூட் அலோசியஸ் ஆகியோரும் அடங்கியிருந்தனர்.




# TAMIL HERITAGE MONTH CELEBRATIONS HOSTED BY DURHAM TAMIL ASSOCIATION





கடந்த 26-01-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை ஏஜக்ஸ் நகரில் நடைபெற்ற கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் "டுறம் தமிழர் சங்கம்" அமைப்பு நடத்திய "பொங்கல் விழா மற்றும் தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்" வைபவத்தில் மத்திய அமைச்சர்கள் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் மார்க் கொலன்ட் ஆகி-யோரும் இன்னும் மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் மேயர்கள் என அரசியல் பிரமுகர்கள் நிறைந்து வந்து மண்டபத்தை அழகும் ஆளுமையும் கொண்டதாக ஆக்கினார்கள்.

மேற்படி அமைப்பின் தற்போதைய தலைவர் ஹாந்தன் மாணிக்கவாசகர் அவர்கள் மற்றும் "டுறம் தமிழர் சங்கம்" அமைப்பின் நிர்வாகசபையினர். அனைவரும் சேர்ந்து விழாவை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். விழா நிகழ்ச்சிகளை நிர்வாக சபை உறுப்பினர் மதி மதிசயன் தொகுத்து வழங்கினார். நடனங்கள்- இசைக் கச்சேரிகள்- உரைகள் என அன்றைய விழா தொடர்ச்சியாகக் களை கட்டி நின்றது. கனடா உதயன் பத்திரிகை சார்பில் அதன் பிரதம ஆசிரியர் அங்கு கலந்து கொண்டார்.

# கனடா கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் நடத்திய "பொங்கல் விழா" கலந்து கொண்டவர்களின் வாழ்த்துக்களினால் சிறப்பைப் பெற்றது

கடந்த 26-01-2024 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தினர் நடத்திய "பொங்கல் விழா" கலந்து கொண்டவர்களின் வாழ்த்துக்களினால் சிறப்பைப் பெற்றதுடன் ஒரு போற்றப்பெறும் பண்பாட்டுப் பெருவிழாவாகவும் களைகட்டியது.

மேற்படி விழாவில் உப நிகழ்வுகளாக "கவிச்சரம்" நூல் வெளியீட்டு விழா. "பாவலர்" பட்டமளிப்பு விழா. கவியரங்கம் என நீண்டதொரு தமிழ்ப் பண்பாட்டைப் பே-ணிய விழாவாக தொடர்ந்தது.






கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தலைவர் திரு குமரகுரு கணபதிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்த பொங்கல் விழாவில் பேராசிரியர்கள் .இ. பாலசுந்தரம் அவர்கள் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினர். கவிச்சரம் நூல் பற்றிய அறிமுக உரையையும் பொன்னையா விவேகானந்தன் அவர்கள் வழங்கினார்.

ஆர்வத்துடன் கலந்து கொண்ட பார்வையாளர்கள் மற்றும் விழாவை சிறப்புற ஏற்பாடு செய்த கவிஞர் கழகத்தின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் அனை-வரையும் தனது சிறப்புரையில் உதயன் பத்திரிகை ஆசிரியர் பாராட்டினார்.

# மாவை சேனாதிராஜாவிடமிருந்து கற்றுக்கொள்வது

## யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஈழத்தமிழ் அரசியலில் அரசியல் நாகரீகம் குறைந்து கொண்டே போகிறது.தமிழ் அரசியலில் மூத்த கட்சியாகிய தமிழரசு கட்சியின் வயது 75. அந்தக் கட்சிக்குள் மாவை சேனாதிராஜாவின் வயது 62.அதாவது கட்சியின் மிக மூத்த உறுப்பினர்களில் ஒருவர். ஆனால் அவரை அவருடைய வயதில் அரைவாசியை விடக் குறைவான கட்சிக்காரர்கள் அவமதித்திருக்கிறார்கள். மிகக் கீழ்த்தரமான வார்த்தைகளால் அவரை புண்படுத்தியிருக்கிறார்கள். அதை ஏனைய மூத்த உறுப்பினர்கள் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். (தொடர்ச்சி 8ம் பக்கம்)